கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
242
புரட்டாதி 2024
05.09.2024
ஆவணச் சிறப்பிதழ்
100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

என்.செல்வராஜா
எம்.கே.முருகானந்தன்
கொற்றை பி.கிருஷ்ணானந்தன்
மு.அநாதரட்சகன்
வி.ரி.இளங்கோவன்
சிவ.ஆரூரன்
முருகபூபதி
இ.சு.முரளிதரன்
தெணியான்
கோகிலா மகேந்திரன்
கி.நடராசா
பேராசிரியர் கா.சிவத்தம்பி



## நெல்லை க.பேரன் சிறப்பிதழ்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024.9.05 - புரட்டாதி - ஆவணச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

எறிகணைகளால் மௌனிக்கப்பட்ட
நெல்லை க.பேரன் : வாழ்வும் பணிகளும்
- என் செல்வராஜா /03

நெல்லை க. பேரனின்
“வளைவுகளும் நேர் கோடுகளும்”
- எம்.கே.முருகானந்தன் /11

விமானங்கள் மீண்டும் வரும்
நெல்லை க.பேரனின் குறுநாவல்
மீண்டும் ஒரு குறும்பார்வை
- கொற்றை பி.கிருஷ்ணானந்தன் /14

குத்துவிளக்கு
- வி.ரி.இளங்கோவன் /16

நெல்லை க. பேரனின்
“ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்”
சிறுகதைத்தொகுப்பின் மீதான பார்வை
- மு.அநாதரட்சகன் /17

நெல்லை க.பேரனின் மனச்சான்று
“சத்தியங்கள்” சிறுகதைத்தொகுப்பு
- சிவ. ஆரூரன் /19

விமானங்கள் மீண்டும் வருமா?
- தெணியான் /21

பேரனும் அவரது படைப்புகளும்
- கி.நடராசா /22

எறிகணை வீச்சுக்குப் பலியான
எழுத்தாளன் நெல்லை க.பேரன்
- முருகபூபதி /23

பேரன் இதயத்தால் பெரியவன்
- கோகிலா மகேந்திரன் /25

நெல்லை க.பேரன் கவிதைகள்
- இ.சு.முரளிதரன் /26


குருதி விலை
- பேராசிரியர் கா.சிவத்தம்பி /28



நெல்லை க. பேரனின்சிறுகதை – 29



நெல்லை க. பேரனின் கவிதைகள் – 10, 18, 26, 32



# ஜீவநதி

**2024 புரட்டாதி இதழ் – 242**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசீர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



### ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

## ஈடு செய்ய முடியாத மனித அவலம்

ஈழத்து இலக்கியப் பரப்பில் ஒரு காலகட்டத்தில் கொடிகட்டிப் பறந்த படைப்பாளராக நெல்லை க. பேரன் திகழ்ந்தார். சிறுகதை, கவிதை, நாவல், குறுநாவல், நாடகம், விமர்சனம், பயண அனுபவக்கட்டுரை, செய்திக்கட்டுரை, நிகழ்வுப் பதிவுகள் என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் தொடர்ந்து இயங்கி வந்த படைப்பாளி நெல்லை க. பேரன். இலக்கிய நிகழ்வுகள், புத்தக வெளியீடுகள் என்பவற்றில் தவறாமல் ஆர்வத்துடன் பங்கு கொண்டு அவற்றை பதிவு செய்து செய்தியாக பத்திரிகைகளிலும் வெளிக்கொண்டு வந்தவர் பேரன். யா/ நெல்லியடி மத்திய கல்லூரியின் பழைய மாணவனான இவர் யாழ்ப்பாண பல் தொழில் நிறுவனத்தில் தொழில் கல்வியையும் பெற்றுக் கொண்டு அஞ்சலகத்திலும் பணி புரிந்தவர். பத்திரிகைளில் செய்தியாளராக பணியாற்றியுள்ளார். மல்லிகை சஞ்சிகைளில் பல கதைகள், கட்டுரைகள், தொடர்கள் என்பவற்றை எழுதியுள்ளார். குவைத் நாட்டில் சில காலம் தொழில் ரீதியாக வாழ்ந்துள்ள இவர் குவைத் நாட்டில் எம்மவர் அடைகின்ற துன்பங்களை தனது அனுபவக் கட்டுரைகளாக தொடராக மல்லிகையில் எழுதியுள்ளார். எழுத்தாளர் களுடன் இனிமையான உறவைப் பேணி வந்த இவர் எழுத்தாளர்கள் பலராலும் நேசிக்கப்பட்டு வந்தவர். நகைச்சுவையான பேச்சும், அனைவரையும் மதித்து நடக்கும் இவரது பண்பால் பலரும் இவரை நேசித்தார்கள். இலக்கியம் சார்ந்த செயற்பாடுகளுக்கு முன்னின்று உழைத்தார். காலத்தின் கொடூரம் காரணமாக பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஆட்லறி ஷெல்லடி தாக்குதலால் அவரது குடும்பத்துடன் இறைவனின் பாதங்களை சென்றடைந்தார். இந்த அவலம் எழுத்தாளர்கள் அனைவருக்கும் பெரும் சோகத்தை அளித்தது. அப்பாவியான ஓர் எழுத்தாளன் குடும்பத்துடன் அநியாயமாக கொல்லப்பட்டும் வாய் திறக்க முடியாத அடிமை களாக வாழ்ந்தோம். இன்று அவரை நினைவு கூர்ந்து அவரை ஆவணப்படுத்தும் விதமாக ஜீவநதி இச்சிறப்பிதழை வெளியிட்டு மன ஆறுதல் அடைகின்றது. உண்மையில் மேலும் சில ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் அவரிடம் இன்னும் பல படைப்புகளை பெற்றிருக்க முடியும். எழுத்தாளர்கள் சார்பாக 33 ஆண்டுகளின் பின்பு அவரது ஆத்மா சாந்திக்காக வேண்டி அவரது பணிகளை கௌரவித்து இவ்விதழை வெளியிடுகின்றோம்.

- க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்

என்.செல்வராஜா,
நூலியலாளர், லண்டன்

# எறிகணைகளால் மௌனிக்கப்பட்ட நெல்லை க.பேரன்: வாழ்வும் பணிகளும்


*யாழ்ப்பாண மாவட்டத்தின் வடமராட்சிப் பிரதேசத்தில் நெல்லியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் கந்தசாமி பேரம்பலம் என்ற இயற் பெயரைக் கொண்ட நெல்லை க. பேரன். 18.12.1946 இல் நெல்லியடியில் வாழ்ந்திருந்த கந்தசாமி-பறுபதம் தம்பதியினரின் மகனாகப் பிறந்தவர்.*

பிரபல்யமான ஈழத்து எழுத்தாளராக இருந்த இவர், செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள், புதினம், கவிதை, நேர்காணல்கள் எனப் பல வடிவங்களில் எழுதியவர். நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவனம், சட்டக் கல்வி நிலையம் ஆகிய வற்றிலும் கல்வி கற்றிருந்தவர்.

நெல்லை க.பேரன் தனது பதினெட்டாவது வயதில் 1964இல் வீரகேசரி பத்திரிகையின் கரவெட்டிப் பகுதி நிருபராகவும், சம காலத்தில் ஈழநாடு பத்திரிகையின் உடுப்பிட்டி செய்தி நிருபராகவும் பணியாற்றத் தொடங்கியவர். அப்பொழுதே தனது எழுத்துப் பணியையும் படிப்படியாக ஆரம்பித்து காலக்கிரமத்தில் ஆக்க இலக்கியவாதியாகப் பரிணமித்தவர். செய்திகளைத் தொகுத்து எழுதுதல், நாடகங்களுக்கு விமர்சனம் எழுதுதல், சிறு கட்டுரைகளை எழுதுதல் போன்ற செயற்பாடுகளின் மூலம் தன்னை ஆரம்பத்தில் எழுத்துத்துறைக்குத் தயார்ப்படுத்திக் கொண்டவர். இவர் பின்னர் 1966 இல் அஞ்சல் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றத் தொடங்கினார். இடையில் தொழில் வாய்ப்புப் பெற்று குவைத் நாட்டில் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

### பேரனின் இலக்கியத்துறை ஈடுபாடு

தனது ஆரம்பக் கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். அக்காலத்தில் அது நெல்லியடி மத்திய கல்லூரியாக அறியப் பெற்றிருந்தது. நெல்லை க.பேரனின் பாடசாலை நாட்களில் “சுகுணா” என்று அறியப்பெற்ற அல்வாய்



சு.கணபதிப்பிள்ளை, வித்துவான் க.ஆறுமுகம் ஆகியோர் வகுப்பறையில் அவரது இயல்பான ஆற்றலை இனம்கண்டு உரமூட்டி வளர்த்தார்கள். பாடசாலை நாட்களிலேயே இலக்கியத் துறையில் பிரபல்யமாகி யிருந்த "கலைச்செல்வி" ஆசிரியர் சிற்பி சி.சிவசரவண பவன், பண்டிதர் க.வீரகத்தி ஆகியோர் பேரனின் ஆசிரியர்களாக வாய்த்திருந்தார்கள்.

1964இல் தனது பதினெட்டாவது வயதிலேயே வீரகேசரியின் யாழ்ப்பாண செய்தியாளராகவும், ஈழநாடு பிராந்தியப் பத்திரிகையின் செய்தியாளராகவும் பணி யாற்றியதால் பத்திரிகைத்துறை வாயிலாக கண்டடைந்த தகவல்கள், இலக்கியவாதிகளினதும் ஆக்க இலக்கிய பிரமுகர்களினதும் தொடர்புகள் என்பன பின்னாளில் இவரை இலக்கியப் புனைவுகளின்பால் இலகுவாக ஈர்க்க வழிகோலியிருந்தன.

இவரது முதலாவது படைப்பாக்கமாக, 1966ஆம் ஆண்டு "சுதந்திரன்" பத்திரிகையில் "எண்பது ரூபா" என்ற சிறுகதை பிரசுரமானது. பேரன் முதன் முதலாக 80 ரூபா அடிப்படைச் சம்பளத்தில் கொழும்பில் வேலைக்குச் சேர்ந்த காலம் அதுவாக இருந்தது. எண்பது ரூபாவில் கொழும்பில் அறை வாடகை, சாப்பாடு, போக்குவரத்து, பொழுதுபோக்கு என்பவற்றைக் கவனிப்பதோடு வீட்டிற்கும் பணம் அனுப்ப வேண்டிய கஸ்டம் அங்கு வாழ்ந்த மற்றும் பிற மாவட்ட தமிழ் இளைஞர்களைப் போலவே அவருக்கும் இருந்துள்ளது. இந்தச் சொற்ப பண வருவாயில் அவரது குடும்ப பட்ஜெட்டை ஒழுங்காகக் கையாள முடியாமல் போன கையறு நிலையினை கிளாக்கர் கந்தையா என்ற பாத்திரத்தின் வாயிலாக "எண்பது ரூபா" என்ற சிறுகதை யில் சித்திரித்திருந்தார். சுதந்திரனில் வெளிவந்த இக்கதையே இவரை எழுத்துலகுக்கு முதலில் அறிமுகப் படுத்தியிருந்தது. இக்கதை பேரனின் "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" என்ற கதைத் தொகுதியிலும் இடம்பெற்றிருக்கிறது.

இலங்கையில் வெளிவரும் தேசிய நாளிதழ் களான வீரகேசரி, தினகரன், சிந்தாமணி (தினபதி வாரப் பதிப்பு), ஈழநாடு, ஈழமுரசு ஆகிய பத்திரிகைகளிலும், அக்காலத்தில் வெளிவந்த சுதந்திரன், தேசாபிமானி, ஜோதி போன்ற வார வெளியீடுகளிலும், சிற்றிதழ்களாக வெளிவந்த மல்லிகை, சிரித்திரன், அஞ்சலி, பூரணி, கற்பகம், ரோஜாப்பூ, ஒளி, மாணிக்கம், செவ்வந்தி ஆகிய இதழ்களிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்த வண்ணம் இருந்தன. தமிழகத்திலிருந்து வெளிவந்த "தாமரை" இதழிலும் பேரனின் பல்வேறு படைப்பாக்கங்கள் வெளிவந்தன. மேலும் கல்லூரி, தமிழ் மன்றங்களின் ஆண்டு மலர்கள் இவரது படைப்புகளை விரும்பிக் கேட்டுப் பெற்று வெளியிட்டிருந்தன. இலங்கை வானொலியில் இவரது பல நாடகங்கள், சிறுகதைகள், கவிதைகள், "கலைக்கோல" விமர்சனங்கள் அவ்வப் போது ஒலிபரப்பாகியிருந்தன.

"ஈழநாடு" பத்திரிகையில் சிலகாலம் மாணவர் களுக்கான பகுதியில் கட்டுரைகளை எழுதியிருந்ததுடன் கேள்வி-பதில் பகுதி ஒன்றையும் நடத்தி வந்ததைத் தவிர நெல்லை க. பேரன், ஈழத்துச் சிறுவர் இலக்கியத் துறையில் தன் வாழ்நாட்காலத்தில் தீவிர ஆர்வம் எதையும் காட்டியிருக்கவில்லை.

**நூல் வெளியீடு**

இலக்கியத் துறையில் 1975இல் நெல்லை க.பேரனின் முதலாவது நூல் சிறுகதைத் தொகுதியாக, "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" என்ற தலைப்பில் வெளிவந்தது. யாழ்ப்பாணம், யாழ். சட்டக் கல்வி நிலைய மாணவர் மன்றத்தினர் இச்சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டிருந்தனர். 1967 முதல் 1975 வரை வெளியான பேரனின் பதின்மூன்று சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பு இது. எழுபதுகளிலே ஈழத்தில் காணப்பட்ட சில வாழ்க்கைப் பிரச்சினைகள் இக்கதை களில் நுணுக்க விபரங்களோடு சித்திரிக்கப்பட்டுள்ளன. தொழில், உழைப்பு, கல்வி, அரசியல், தேசப்பற்று முதலியன இக்கதைகளின் பிரச்சினை மையங்களாக உள்ளன. இந்நூலில் எண்பது ரூபா (1967), கௌரவம் என ஒன்று(1969), குலப்பெருமை(1969), அண்ணா வந்தார் (1969), கடவுள் உள்ளே இருக்கிறார்(1970), உண்மைகள் பொய்ப்பதில்லை(1970), குடிலின் அடியில்(1972), இராமச்சந்திரன் உறங்குகின்றான் (1972), ஒரு படித்த விவசாயியின் பயணம் (1972), மாற்றங்கள் (1973), ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள் (1974), ஒளியை நோக்கி(1975), அவர்கள் என் சுதந்திரத்தைப் பறித்து விட்டார்கள்(1975), ஆகிய சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. இந்நூலுக்கு பேராசிரியர் க.கைலாசபதி முன்னுரையை எழுதியிருந்தார்.

பேரனின் இரண்டாவது நூல் ஒரு நாவலாகும். "வளைவுகளும் நேர்கோடுகளும்" என்ற தலைப்பில் கொழும்பு, வீரகேசரி பிரசுரத்தினரின் 62ஆவது நூலாக ஜனவரி 1978 இல் வெளிவந்திருந்தது. சமூகத்தில் பணத்தையும் ஆடம்பரத்தையும் மாத்திரம் முன்னுக்கு வைத்துக் கொண்டு பல கோணங்கித் தனங்களைச் செய்து வரும் போலிகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழும் இளைய சந்ததியினரின் புரட்சிகர இதயங்களை இந்நாவலில் சந்திக்க முடிகின்றது. சமூகத்தின் வளைவுகளான வர்க்கபேதம், சாதி அமைப்பு, இன்னும் பல பேதமை களை தகர்த்து நிமிர்த்தும் நேர்கோடுகளாக இளைஞர் களின் சக்தி உருவாக வேண்டும் என்பது இந்நாவலின் குறிக்கோளாகின்றது. நெல்லை க.பேரன் இந்நாவலில், சமூகத்தில் தான் பார்த்தும் பழகியும் அனுபவரீதியாக உணர்ந்தும் கொண்ட மனிதர்களின் பிரதிமைகளைப் பாத்திரங்களாகப் படைத்துள்ளார்.

பேரன் அஞ்சல்துறையில் பணியாற்றிய வேளை யில் இரண்டாண்டுகள் சம்பளமற்ற விடுப்புக்கு விண்ணப்பித்து (Unpaid Leave) குவைத் நாட்டில் வெளி நாட்டு வேலை வாய்ப்புப் பெற்று பணியாற்றியிருந்த அனுபவங்களின் வெளிப்பாடாக "விமானங்கள் மீண்டும்

வரும்" என்ற நாவலை எழுதியிருந்தார். இக்குறுநாவல் யாழ். இலக்கிய வட்டம், ஈழநாடு நிறுவனத்துடன் இணைந்து நடாத்திய இரசிகமணி கனக செந்திநாதன் நினைவுக் குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றதுடன் "ஈழநாட்டில்" தொடர்கதையாகவும் பிரசுரிக்கப்பட்டது.

பேரனின் இரண்டாவது நூல் வெளிவந்து சுமார் ஏழாண்டுகளுக்குப் பின்னர் மூன்றாவது நூலாக "விமானங்கள் மீண்டும் வரும்" வெளிவந்தது. நெல்லியடி, ஷர்மிளா பதிப்பக வெளியீடாக டிசம்பர் 1985இல் இந்நாவல் வெளிவந்தது. "சர்மிளா" என்பது பேரன்-உமாதேவி தம்பதியினரின் இளைய மகளின் பெயராகும். ஆசிரிய வெளியீட்டாளராகவே பெரும்பாலான நூல்களை ஈழத்துப் படைப்பாளிகள் வெளியிட்டு வந்த காலமது. (இன்றும் இவ்வாறான நிலைமையே பெரிதும் காணப்படுகின்றது). இந்நிலையில் நெல்லை க.பேரனின் பல நூல்களின் வெளியீட்டாளராக "ஷர்மிளா பதிப்பகம்" என்ற பெயரையே அவர் தனது நூல்களின் வெளியீட்டகமாகக் குறிப்பிட்டு வந்துள்ளமை கவனிக்கத்தக்கது. இந்நாவல் பொருளாதார காரணிகளால் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் மேலைத்தேய நாடுகளுக்கும் எமது இளைஞர் பட்டாளம் படையெடுத்துச் சென்று கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்டதாலும், அத்தகைய பாதையைத் தேர்ந்தெடுத்த ஒரு ஈழத் தமிழ்ப் படைப்பாளியின் பார்வையில் நின்று எழுதப்பட்ட உண்மையின் தரிசனமாக அமைந்திருந்தது. எமது தமிழ் இளைஞர்களின் மத்திய கிழக்கு வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டும் ரீதியில் அமைந்திருந்த இந்நாவல், தனது சகோதரிக்கு வாழ்வளிக்கும் நோக்கில், மத்திய கிழக்கு நாடொன்றிற்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் ஒரு இளைஞனின் கதையாகச் சொல்லப்படுகின்றது. மத்திய கிழக்கு நாடுகளில் நம்மவர்கள் படும் அவஸ்தைகளையும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் திருமண உறவில் அந்தஸ்து, சாதியுணர்வு என்பவை வகித்த வகிபாகம் தளர்ந்து வருவதையும், அவற்றுக்கெதிரான புதியதொரு தலைமுறை உருவாகி வருவதையும் பேரன் இக்குறுநாவலில் புலப்படுத்துகின்றார்.

நெல்லியடி, ஷர்மிளா பதிப்பக வெளியீடாக ஜனவரி 1987இல் இவரது நான்காவது நூலும் இரண்டாவது சிறுகதைத் தொகுதியுமான "சத்தியங்கள்" வெளிவந்தது. நெல்லை க.பேரன் 1966 முதல் 1986 வரை பல்வேறு காலகட்டங்களில் எழுதி, பத்திரிகைகளிலும் சிறு சஞ்சிகைகளிலும் வெளியானவற்றுள் தேர்ந்தெடுக் கப்பட்ட மேலும் 17 சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன. ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார் (வீரகேசரி, ஏப்ரல் 1985), மனப்போக்கு (வீரகேசரி, ஏப்ரல் 1968), ஒரு விதமான கதை (1971), சத்தியங்கள் திரளும்போது (ஈழமுரசு, மே 1985), சினிமாவுக்குப் போகிறார்கள் (சிந்தாமணி, பெப்ரவரி 1969), ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது (வீரகேசரி, ஜூலை 1976), ஒரு தொழிலாளி சைக்கிள் வாங்குகிறான் (உள்ளம்-யாழ். சட்டக் கல்வி நிலையக் கையெழுத்துச் சஞ்சிகை, ஏப்ரல் 1975), ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம் (செவ்வந்தி, செப்டெம்பர் 1976), வாடகைக்கு வீடு (சுதந்திரன், பெப்ரவரி 1970, தாமரை, 1970), பெருமூச்சு (அஞ்சலி, ஓகஸ்ட் 1971), ஏணிப் படிகள் (கலை நிதியம்-பருத்தித்துறை மகளிர் கல்லூரிமலர் , 1984/85), புகை (சிந்தாமணி, பெப்ரவரி 1969), கவிதை அரங்கேறும் நேரம் (ஈழமுரசு, 1986), ஒரு நாணயம் காப்பாற்றப்படுகிறது (வீரகேசரி, 1986), அன்புள்ள எழுத்தாளருக்கு (வீரகேசரி, ஜூலை 1984), மெல்ல இனிச் சாகும் (மல்லிகை, டிசம்பர் 1986), பிள்ளைகள் (ஜனவரி 1987) ஆகிய தலைப்புகளில் இவை எழுதப்பட்டுள்ளன.

நெல்லை க.பேரன் படைப்பாக வெளிவந்த ஐந்தாவது நூல் ஒரு கவிதைத் தொகுதியாகும். இருபத்தியெட்டு பலவினக் கவிதைகளின் தொகுப்பாக "பேரன் கவிதைகள்" என்ற தலைப்பில் இந்நூல் ஷர்மிளா பதிப்பக வெளியீடாக ஓகஸ்ட் 1989இல் வெளிவந்துள்ளது. நெல்லியடி முடக்காட்டைச் சேர்ந்த தனது மாமனாரான அமரர் கந்தவனம் பரமானந்தம் அவர்களின் மறைவின் 31ஆம் நாள் நினைவாக இந்நூலை பேரன் வெளியிட்டிருந்தார். இத்தொகுப்பில் அன்புள்ள தமிழ்ப் பெண்ணே, கடலே, பாரதி, பூராயம், "பாணதுர" கரையோரப் புகைவண்டி, காற்சட்டை உத்தியோகம், வந்திடுவேன் தைக்கு முன்னர், பயனுள்ள வழிகளில் செலவிடுவாயா?, ஓ மிளகாய் பழமே, சாதி-சாதி-சாதி, பொங்கல் கவிதை, முட்டாள்கள் அல்ல, எப்ப நான் சரிவேன், போகாமல் நிற்பதேன்?, மாணவிகள், இல்லறம் நல்லறமாகும், துடிக்கும் இதயம், அந்தநாள் ஞாபகம், காலத்தின் கவிதைகள், சின்னஞ்சிறு வயதில், என்னருமைச் சிறிய நாடே, உழைக்கும் கரங்கள் உயரட்டும், எக்கவுண்டன் ஆகி, பாரதியே நீ இருந்தால், பற்றிப் பிடியுங்கள், இயேசுவாய் மாறிவிட்டேன், ஏற்றுமதிக் கூலிகள், ஓ தமிழ்ப் பெண்ணே ஆகிய தலைப்புகளில் முன்னர் ஊடகங்களில் வெளியான கவிதைகள் இடம்பெற்றுள்ளன.



நெல்லை க.பேரனின் ஆக்க இலக்கியங்கள் அவர் வாழ்ந்துவந்த சமுதாயத்தில் நிலவுகின்ற பிரச்சினைகளையும், தான் அன்றாடம் சந்திக்கும் மக்கள் படுகின்ற துயரங்களையும் எடுத்துரைத்துவந்துள்ளன. விவசாயத் துறைக்கு முக்கியத்துவம் வழங்கிய

துடன் குறிப்பாக சாதி அமைப்பு முறைகள், அடக்கு முறைகள், சுரண்டல் கொடுமைகள், பெண்ணடிமை என்பனவற்றைக் கண்டிக்கும் பாங்கிலேயே இவரது பெரும்பாலான படைப்புகள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன.

1983இல் கறுப்பு ஜூலை தமிழின அழிப்பு திட்டமிட்ட வகையில் தென்னிலங்கை அரசியல்வாதி களால் மேடையேற்றப்பட்டவேளையில், வெள்ளவத்தையில் இருந்த இவரது வாடகை வீட்டில் சேகரித்து வைத்திருந்த பல நூற்றுக்கணக்கான இலக்கிய நூல்களும், கட்டுரை நூல்களும், பத்திரிகைகளிலும் வானொலியிலும் வெளிவந்திருந்த பேரனின் ஆக்கங் களின் பிரதிகளும் அவ்வேளையில் அவர் மேற் கொண்டிருந்த சட்டக் கல்விக்காக சேகரித்து வைத் திருந்த சட்டக் கல்வித்துறை சார்ந்த பெறுமதியான குறிப்பேடுகளும் நூல்களும் தீயினால் எரியுண்டு நாசமாகிவிட்டன. இது இவரது இலக்கிய வாழ்விலும், உயர் கல்விக்கான எதிர்காலத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்ததை அவர் கட்டைவேலி ஞானாசாரி யார் கல்லூரி மாணவ எழுத்தாளர்கள் சந்திப்பின் போதான நேர்காணலில் தெரிவித்திருந்தார்.

#### பேரனின் நாடகத்துறை ஈடுபாடு

நெல்லியடி முருகன் கோவில் வீதியில் நெல்லியடி சண்முகானந்தா நாடக சபையினர் அரங் கேற்றிய "கண் திறந்தது", "மாதவி பெற்ற மாணிக்கம்", "இரத்தத் திலகம்" போன்ற நாடகங்களில் சாத்திரியார், புரோக்கர் பாத்திரங்களை ஏற்று நடித்த அனுபவம் பேரனுக்கு உண்டு. இவருக்கு அண்ணாவியாராக அமரர் மு.கனகரத்தினம் இருந்து வழிநடத்தியுள்ளார்.

இவரது எழுத்துக்களில் சமகால நாடகங்கள் பற்றிய காத்திரமான விமர்சனங்களும் உள்ளடங்கி யிருந்தன.

நாடகத்துறை சார்ந்து க.பாலேந்திரா அவர்கள் "தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் நாடகமும் பதிவுகளும்" என்ற நூலை 2017இல் லண்டன் தமிழ் அவைக்காற்று கலைக்கழக வெளியீடாக வெளியிட்டி ருந்தார். 1979இல் கட்டுப்பெத்தையில் திரு பாலேந்திரா அவர்களால் முதலில் மேடையேற்றம் கண்ட "யுக தர்மம்" நாடகம் தொடர்ந்து 29 தடவைகள் பல்வேறு இடங்களிலும் மேடையேற்றம் கண்டு, 2017இல் லண்டனில் சிறுவர்களால் நடிக்கப்பெற்று 08.10.2017 அன்று மீண்டும் மேடையேற்றம் கண்ட வேளையில் இந்நூல் வெளியிடப்பட்டது. இந்நாடகம் 30 தடவை கள் வரை மேடையேற்றப்பட்டவேளையில் ஊடகங் களில் பிரசுரமான மேற்படி "யுகதர்மம்" நாடகம் தொடர்பான விமர்சனக் குறிப்புகளை பாலேந்திரா இந்நூலில் சேர்த்திருந்தார். அ.யேசுராசா, தெளிவத்தை யோசப், ஏ.ரி. பொன்னுத்துரை, கே.எஸ்.சிவகுமாரன், ஐ.சண்முகலிங்கம், கலைச்செல்வன், மு.புஷ்பராஜன், சி.சிவசேகரம், எஸ்.சிவநாயகம் ஆகியோருடன் நெல்லை க.பேரனும் இந்நாடகத்துக்கான தனது விமர்சனத்தை ஊடகங்களில் எழுதியிருந்தார். அவற்றை ஒரு தொகுப் பாக இந்நூலில் பாலேந்திரா இடம்பெறச் செய்திருந்தார்.

நெல்லை க.பேரன் எழுதிய "மாற்றாத காசோலைகள்" என்ற வானொலி நாடகம் இலங்கை வானொலியில் மூன்று தடவைகள் மீள் ஒலிபரப்பாகி யுள்ளது.

#### பேரனின் படைப்புகளை உள்ளடக்கிய நூல்வெளியீடுகள்

நெல்லை க.பேரன் வாழ்ந்த காலத்தில், அவரது பெரும் பங்களிப்புடன் தொகுக்கப்பட்ட "உயிர்ப்புகள்: சிறுகதைகளும் மதிப்பீடும்" என்ற தொகுப்பு டிசம்பர் 1986,ல் கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தினரின் பெயரில் வெளியிடப்பட்டது. இந்நூலிலுள்ள சிறுகதைகளை பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் மதிப்பீடு செய்திருந்தார். அவரது மதிப்பீடுகளும் அந்நூலில் இடம்பெற்றிருந்தன. கரவெட்டி, கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூட்டுறவுச் சங்கம் இந்நூலை நெல்லியடி கலாலயா பதிப்பகத்தின் மூலம் அச்சிட்டு விநியோகித்திருந்தது.

வடமராட்சியில், குறிப்பாக நெல்லியடி, அல்வாய், கரவெட்டி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த படைப்பாளிகளின் பன்னிரு சிறுகதைகளும் அவற்றிற்கான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் விமர்சனக் குறிப்பும் இந்நூலில் இடம்பெற்றிருந்தன. தமிழ் இலக்கியப் பரப்பில் சமுதாய முன்னேற்றத்திற்கு உறுதுணையாக ,லக்கியங்களைப் படைப்பதே ஈழத்து இலக்கியத்தின் பொதுக் குணாம்சமாகின்றது என்ற பொது நோக்கிலிருந்து சற்றும் வழுவாது சமுதாயத்தை உயிர்ப்பிக்கும் இலக்கினை அடியாதாரமாகக் கொண்ட சிருஷ்டிகளே இத்தொகுப்பில் இடம்பெறுவதால் இத்தொகுதி "உயிர்ப்புகள்" என்னும் பெயரினைத் தாங்கி வெளிவந்துள்ளது என்று நூலின் தலைப்புக்கான விளக்கமளிக்கப்பட்டிருந்தது. இத் தொகுதியில், பிறந்த மண் (நெல்லை க.பேரன்), உவப்பு (தெணியான்), இதுவும் பிரசவம் (சி.வன்னியகுலம்), அகதிகள் (கருணையோகன்), அதிர்வுகள் (கண.மகேஸ்வரன்), உலகம் பரந்து கிடக்கிறது (குப்பிழான் ஐ.சண்முகன்), எங்கேதான் வாழ்ந்தாலும் (ச.முருகானந்தன்), நாளையும் அடுப்பு எரியும் (கி.பவானந்தன்), நாட்கள் கணங்கள் நமது வாழ்க்கைகள் (த.கலாமணி), அல்சேஷன்கள் உள்ளே வரலாம் (க.நவம்), தத்து (ராஜ ஸ்ரீகாந்தன்), விடிவின் பாதைக்கு (க.சின்னராஜன்) ஆகிய தலைப்புகளில் எழுதப் பட்ட சிறுகதைகளும், "உயிர்ப்புகளின் உயிரைத் தேடி" என்ற தலைப்பில் இத்தொகுதிக்கும், இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள கதைகளுக்குமான பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் விமர்சனக் குறிப்பும் (பக்கம் 116-144) இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு கதையின் இறுதியிலும் ஆசிரியர் பற்றிய வாழ்க்கைக் குறிப்பும் அறிமுகமும் இடம்பெற்றுள்ளது. இந்நூல் வெளிவந்த

காலத்தில் இதில் நா.சோமகாந்தன் (ஈழத்துச் சோமு) போன்ற சில படைப்பாளிகள் நெல்லை க.பேரனால் இருட்டடிப்புச் செய்யப்பட்டிருந்தார்கள் என்ற குற்றச் சாட்டு எழுந்து, அது தொடர்பான பல வாதப்பிரதி வாதங்களும் இலக்கிய மேடைகளில் வலம் வந்திருந்தன. எழுத்தாளர் லெ.முருகபூபதி அவர்கள் தனது கட்டுரை யொன்றில் இதனைக் குறிப்பிட்டு, இத்தொகுப்புக்கான பங்களிப்பினை வழங்கிய வேறும் பல எழுத்தாளர்களை விட்டுவிட்டு பேரனை மட்டும் குறைகூறுவது தவறு என்றும், நூலுக்கு முகவுரை வழங்கிய பேராசிரியராவது இக்குறையை பேரனிடம் சுட்டிக்காட்டியிருக்கலாம் எனத் தெரிவித்ததாகக் குறிப்பிட்டிருந்தார்.

பேரனின் மறைவின் பின்னர் தமிழகத்திலிருந்து ஈழத்துப் படைப்பாளி செ.யோகநாதன் மற்றும் துணைவியார் சுந்தரலட்சுமி இருவரும் இணைந்து, "ஒரு கூடைக் கொழுந்து: இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள்" என்ற தொகுப்பின் இரண்டாவது பாகத்தை மே 1994இல் சென்னை சத்தியபாரதி பதிப்பகத்தின் மூலம் வெளியிட்டிருந்தார்கள். 648 பக்கம் கொண்ட அந்த நூலில் நெல்லை க.பேரனின் "கவிதை அரங்கேறும் நேரம்" என்ற சிறுகதையும் இடம்பெற்றிருந்தது.

"மல்லிகைச் சிறுகதைகள்" இரண்டாம் தொகுதியை செங்கை ஆழியான் அவர்கள் டொமினிக் ஜீவாவின் மல்லிகைப் பந்தல் வெளியீடாக மார்ச் 2003இல் வெளியிட்டார். அதில் "மல்லிகை" இலக்கிய மாசிகையில் வெளிவந்த 700க்கு மேற்பட்ட சிறுகதை களில் இருந்து 41 கதைகளைத் தேர்ந்தெடுத்து இத் தொகுப்பில் இடம்பெறச் செய்திருந்தார். இவற்றுள் நெல்லை க.பேரனின் "மெல்ல இனிச் சாகும்" என்ற சிறுகதையும் இடம்பெற்றிருந்தது.

"காலத்தால் மறையாத கற்பக இதழ் சிறுகதைகள்" என்ற தலைப்பில் தம்பு-சிவா என்ற இலக்கியவாதி, (இயற்பெயர் - த.சிவசுப்பிரமணியம்) ஒரு நூலைத் தொகுத்து சென்னை மணிமேகலை பிரசுரமாக அதனை 2005 இல் வெளியிட்டிருந்தார். இளம் எழுத்தாளர் முன்னேற்றப் பேரவையின் வெளியீடாக 1970 நடுப்பகுதிகளிலிருந்து ஈழத்தின் சிறுசஞ்சிகையாக வெளிவந்திருந்த "கற்பகம்" இதழின் சிறப்பாசிரியராகப் பணியாற்றியவர் த.சிவசுப்பிர மணியம். மூன்றே மூன்று இதழ்களே வெளிவந்திருந்த இச்சிற்றிலக்கிய ஏட்டில் வெளிவந்துள்ள 12 கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. நெல்லை க.பேரனின் "விழிப்பு: பொன்னம்மாவும் தோசைச் சட்டியும் அவளது மகனும்" என்ற சிறுகதை இத் தொகுப்பில் இடம்பெற்றிருந்தது. பேரனின் கதையுடன், செ.கணேசலிங்கன், நீர்வை பொன்னையன், குப்பிளான் ஐ.சண்முகன், கே.டானியல், போர்வையூர் ஜிப்ரி, செ.கதிர்காமநாதன், எஸ்.இராஜம் புஷ்பவனம், செ.கந்த சாமி, செ.யோகநாதன், த.சிவசுப்பிரமணியம், தமிழக எழுத்தாளர் பிரகாஷ், ஆகியோரின் கதைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றிருந்தன.

பேரனின் சிறுகதைகள் மாத்திரமன்றி அவரது கவிதைகளும் சில தொகுப்புகளில் இடம்பெற்றுள்ளன. "தளிர்கள்" என்ற தலைப்பில் க.மயில்வாகனம் அவர்கள் செப்டெம்பர் 1970இல் யாழ்ப்பாணத்திலிருந்து, யாழ். இலக்கிய நண்பர்கள் கழகம் என்ற அமைப்பின் வெளி யீடாக ஒரு கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார். எழுபதுகளில் எழுதிவந்த இலங்கையின் 23 இளம் கவிஞர்களின் 36 கவிதைகளின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்திருந்தது. குப்பிழான் ஐ.சண்முகம், திமிலைக் கண்ணன், மாவை தி.நித்தியானந்தன், கல்முனைப் பூபால், சாரணா கையூம், ஆ.மகாதேவன், ஈழமேகம், நவாலியூர்க் கவிராயர், குமரன், நிலவின் தாசன், பொலிகை வேந்தன், சி.யோகேஸ்வரி, நிமலன். மலைமதி சந்திரசேகரன். எஸ்.இராஜம் புஷ்பவனம், ச.பாலதேவி, கே.கே.ரி.சர்மா, பூ.செல்லத்துரை, ஐ.சாந்தன், துரை மனோகரன், காந்தன் ஆகியோரின் கவிதைகளுடன் நெல்லை க.பேரனின் கவிதையொன்றும் இத்தொகுப் பில் இடம்பெற்றுள்ளது.

ஒய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளரும், படைப்பிலக்கியவாதியுமான கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் 65ஆவது ஆண்டு விழாவொன்று தெல்லிப்பழையில் 17.11.2015,ல் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது. சு.செல்லத்துரை, ராஜி கெங்கா தரன் ஆகிய இருவரின் கடின உழைப்பில் "விழிசைக் குயில்: கோகிலா மகேந்திரனின் அகவை அறுபத்தைந்து நிறைவு மலர்" என்ற சிறப்பு மலர் ஒன்று அத்தருணம் தெல்லிப்பழை கலை இலக்கியக்கள வெளியீடாக நவம்பர் 2015இல் வெளியிடப்பட்டிருந்தது. இந்நூலில் "விழிப்பு 2: விழிகளின் நினைவு" என்ற இரண்டாவது பிரிவில் திருமதி கோகிலா மகேந்திரனின் சில நூல் களுக்காக வழங்கப்பட்ட பிற ஆளுமைகளின் அணிந்துரைகள் வழிவந்த கருத்துக்களும் இங்கு தொகுக்கப்பட்டிருந்தன. பேராசிரியர் அ.சண்முகதாஸ், க.சண்முகலிங்கம், கே.ஆர்.டேவிட், க.சச்சிதானந்தன், ஜின்னாஹ் ஷரிபுத்தீன், ஆனந்தி குமாரதாசன், ச.பொ.கனகசபாபதி, வைத்திய நிபுணர் சீ.நவரத்தினம், பேராசிரியை ஏ.என்.கிருஷ்ணவேணி, சிவமலர் சுந்தரபாரதி ஆகியோர் வழங்கிய உரைகளுடன் நெல்லை க.பேரனின் உரையும் இப்பிரிவில் இடம்பெற்றுள்ளது.

### பேரனின் படைப்பாளுமை பற்றிய குறிப்புகளைத் தரும் சில பிரசுரங்கள்

வடமராட்சியில், கட்டைவேலி ஞானாசாரியார் கல்லூரி மாணவ எழுத்தாளர்கள் எண்மர் ஒரு குழுவாக இணைந்து, தமது பிரதேசத்தின் எழுத்தாளரான நெல்லை க.பேரன் அவர்களை நேர்காணல் செய்து "சந்திப்பு" என்ற தலைப்பிலான சிறிய நூலுருவில் அதனை வெளி யிட்டிருந்தார்கள். இவர்கள் அனைவரும் அக்கால கட்டத்தில் பாடசாலை மட்டத்தில் சிறு கையெழுத்துச் சஞ்சிகைகளின் ஆசிரியர்களாக முகிழ்ந்தெழுந்து வந்து

கொண்டிருந்தவர்கள் என்பது இங்கு குறிப்பிடத் தகுந்தது. அடைப்புக் குறிக்குள் அவர்கள் வெளியிட்டு வந்த கையெழுத்துச் சஞ்சிகைகளின் பெயரும் குறிப் பிடப்பட்டுள்ளன. ஆ.மயூரன் (வசந்தம்), சி.சிவரூபன் (இளவேனில்), கு.கஜேந்திரா (மந்தமாருதம்), வி.பரமதாஸ் (தாரகை), அ.மோசஸ் அனோஜ் (முல்லை), ஆகிய மாணவர்களும், ஈ.அகல்யா (தென்றல்), சி.கலை மகள் (சாரல்), சி.அருட்செல்வி (தாமரை) ஆகிய மாணவிகளும் இந்நேர்காணலை மேற்கொண்டிருந் தனர். 1985 இல் மேற்கொள்ளப்பட்ட இந்நேர்காணலே நெல்லை க.பேரன் அவர்களின் வாழ்வும் இலக்கியப் பணிகளும் பற்றிய முதல்நிலைத் தகவல்களை வழங்கிய ஒரே ஆவணமாகும். இவர்களது முயற்சிக்கு ஆதரவாக நெல்லியடி கலை இலக்கிய நண்பர் கழகம் கைகொடுத்து இச்சிறு பிரசுரத்தினை பதிப்பித்து வழங்கியிருந்தது.

டொமினிக் ஜீவா அவர்கள் ஜனவரி 1996இல் யாழ்ப்பாணத்திலிருந்து, மல்லிகைப்பந்தல் வெளியீடாக "மல்லிகை முகங்கள்" என்ற நூலை வெளியிட்டிருந்தார். ஈழத்துப் படைப்பாளிகள், கலைஞர்கள், விற்பன்னர்கள், எனப் பலரும் டொமினிக் ஜீவாவின் "மல்லிகை" சஞ்சிகையின் முன்னட்டையை சிறப்பு அதிதிகளாக அலங்கரித்துள்ளனர். அவர்களில் தேர்ந்த 65 பேரைப் பற்றிய குறிப்புகளின் தொகுப்பே இந்நூலாகும். இவர்களுள் நெல்லை க.பேரன் பற்றி மு.அநாதரட்ச கனால் ஜூலை 1992 "மல்லிகை" இதழில் எழுதப்பட்ட கட்டுரையும் இடம்பெற்றிருந்தது. இக்கட்டுரையில் அநாதரட்சகன் குறிப்பிட்டிருந்த "இன்னும் நூலுருப் பெறாத பேரனின் இறுதிப் படைப்பு, "அந்த ஆறு நாட்கள்" என்ற குறுநாவல் கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது" என்ற செய்தி கவனத்திற்குரியது. எதிர்காலத் தில் பேரனின் பெருந்தொகுப்பொன்றை வெளியிட முன்வரும் இலக்கியவாதிகளுக்கு இச்செய்தி பயனுள்ள தாக அமையும்.

"நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள்" என்ற தலைப்பில் எழுத்தாளர் லெ.முருகபூபதி எழுதி, சென்னை தமிழ்க் குரல் வெளியீடாக ஜூன் 1995இல் வெளியிடப்பட்ட ஒரு நூல், முருகபூபதி "பாரிஸ்-ஈழநாடு" வார இதழில் தொடராக எழுதியிருந்த 12 கட்டுரைகளை உள்ளடக்கியிருந்தது. ஆசிரியருக்குப் பரிச்சயமான பன்னிரு இலக்கியப் படைப்பாளிகளின் நினைவுகளை மீட்டெடுக்கும் முயற்சியாக இக்கட்டுரைகள் அமைந்திருந்தன. இரசிகமணி கனக செந்திநாதன், கே.டானியல், மு.தளையசிங்கம், எஸ்.எம்.இராமையா, க.கைலாசபதி, கே.ஜி.அமரதாச, எச்.எம்.பி.மொஹிதீன், க.நவசோதி, ஈழவாணன், காவலூர் ஜெகந்நாதன், கலாநிதி விசாலி ஃப்புர்னீகா ஆகியோர் பற்றிய கட்டுரைகளுடன், நெல்லை க.பேரன் பற்றிய பல்வேறு நினைவுப் பதிகைகளை உள்ளடக்கிய தாக இந்நூல் அமைந்திருந்தது.

குப்பிழான் ஐ.சண்முகன் எழுதிய "அறிமுகங் கள், விமர்சனங்கள், குறிப்புக்கள்" என்ற நூல் ஜூன் 2003இல் தென்னிலங்கையின் கல்கிசையிலிருந்து நிகரி வெளியீடாக வெளியிடப் பட்டிருந்தது. புனைகதை வகையைச் சாராத பத்தி எழுத்துக்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்திருந்தது. பல கலைஞர்-எழுத்தாளர்கள் தொடர்பான எழுத்து முயற்சிகள் பற்றிய குறிப்புகள் பல இக்கட்டுரைகளில் இடம்பெற்றிருந்தன. சுமார் 40 வருடகால இலங்கைத் தமிழ் இலக்கியச் சூழலின் ஆவணப் பதிவான இந்நூலில் "துளிர்க்கத் துடிக்க இதயம்: நெல்லை க.பேரன் நினைவாக", என்ற குப்பிழான் ஐ.சண்முகன் எழுதிய கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

இதே தலைப்பில் (துளிர்க்கத் துடித்த இதயம்: நெல்லை க.பேரன் நினைவாக) நினைவு மலர் ஒன்றும் பேரனின் மறைவின் நினைவாக 1991இல் வெளி வந்திருந்தது. பேரனின் இலக்கிய நண்பர்கள் வெளியிட்ட அஞ்சலி உரைகளின் தொகுப்பாக இந்நூல் வெளி வந்திருந்தது.

பேரனின் நினைவுகளைத் தாங்கி மற்றொரு நினைவு மலரும் "வாழ்க்கையின் தேடல்கள்" என்ற தலைப்பில் ஓகஸ்ட் 1991இல் நெல்லை க.பேரனின் உறவினர்களால் வெளியிடப்பட்டிருந்தது. இம்மலரில் தமது மலரும் நினைவுகளை சக எழுத்தாளர்களும் நண்பர்களுமான இ.ஐயாத்துரை (பிரதேச செயலாளர்), எம்.கே.முருகானந்தன், டொமினிக் ஜீவா, தெணியான், கோகிலா மகேந்திரன், புலோலியூர் ஆ.இரத்தின வேலோன், செங்கை ஆழியான், சு.மாணிக்கவாசகர், நடராஜலிங்கம் போன்றோர் பதிவுசெய்திருந்தனர்.

"புனைகதை இலக்கிய விமர்சனம்" என்ற தலைப்பில் எழுத்தாளர் சி.வன்னியகுலம் அவர்கள் அல்வாய், பர்வதா வெளியீட்டகத்தின் மூலம் ஜூன் 2001இல் வெளியிட்டிருந்தார். 1985 முதல் 2001இன் ஆரம்பம் வரை வெளியான பத்து சிறுகதைத் தொகுதி களினதும் ஐந்து நாவல்களினதும் இலக்கிய விமர்சனமாக இத்தொகுதியின் கட்டுரைகள் அடங்கியிருந்தன. "விமானங்கள் மீண்டும் வரும்" என்ற பேரனின் குறுநாவல் பற்றிய விமர்சனமும் இவற்றுள் ஒன்றாக இடம் பெற்றிருந்தது.

திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் "ஈழத்துச் சிறுகதைகளும் ஆசிரியர்களும்: 1962-1979" என்ற தலைப்பில் சென்னை மணிமேகலைப் பிரசுரமாக 2008இல் ஒரு நூலை வெளியிட்டிருந்தார். 1962 முதல் 1998 வரையிலுமான காலப்பகுதியில் வெளியாகிய ஈழத்துச் சிறுகதைத் தொகுப்புக்கள், அதன் ஆசிரியர்கள் தொடர்பான தனது திறனாய்வு சார்ந்த மதிப்புரைகளை இரு பாகங்களில் இவர் அப்போது வெளியிட்டிருந்தார். இது அவரது நூலின் முதலாம் பாகமாகும். 1962 முதல் 1979 வரையிலுமான காலத்தில் வெளிவந்த சிறுகதைத் தொகுப்புக்கள் பற்றியதாக இது அமைந்துள்ளது. இலங்கையர்கோன், செ.கணேசலிங்கன், வ.அ.இராச ரத்தினம், டொமினிக் ஜீவா, காவலூர் இராசதுரை, நீர்வை பொன்னையன், வரதர், கே.டானியல்,

நாவேந்தன், பவானி ஆழ்வாப்பிள்ளை, எம்.ஏ.ரஹ்மான், செ.கதிர்காமநாதன், என்.எஸ்.எம்.ராமையா, செ.யோக நாதன், மு.தளையசிங்கம், மண்டூர் அசோகா, புலோலியூர் க.சதாசிவம், அ.யேசுராசா, சாந்தன், மு.திருநாவுக்கரசு, நா.முத்தையா, யோ.பெனடிக்ற் பாலன், லெ.முருகபூபதி, சுதாராஜ், மருதூர் மஜீத், காவலூர் எஸ்.ஜெகநாதன், நெல்லை க.பேரன் ஆகி யோரது படைப்புக்கள் பற்றிய தனித்தனிக் கட்டுரை களுடன், பொதுவான ஈழத்து ,லக்கியப் போக்குகள் பற்றிய கட்டுரைகளுமாக மொத்தம் 35 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இந்நூல் பின்னர் 2018 இல் முழுத்தொகுப்பாக 73 திறனாய்வுக் கட்டுரைகளுடன் அல்வாய் ஜீவநதி வெளியீடாக ஆவணி 2018இலும் வெளியிடப்பட்டிருந்தது.

பேராசிரியர் க.கைலாசபதி 23 நூல்களுக்கென எழுதிய முன்னுரைகளின் தொகுப்பாக "கைலாசபதி முன்னுரைகள்" என்ற நூல் கொழும்பு குமரன் புத்தக இல்லத்தினரால் மார்கழி 2004இல் வெளியிடப் பட்டிருந்தது. இதில் இடம்பெற்றிருந்த 23 நூல்களுக் கான கைலாசபதியின் முன்னுரைகளில் நெல்லை க.பேரனின் "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையும் இடம் பெற்றிருந்தது.

முடிவுரை

ஈழத்து எழுத்தாளரும், தற்போது அவுஸ்திரேலி யாவில் (மெல்பெர்ண்) புலம்பெயர்ந்து வாழ்பவருமான லெ.முருகபூபதி, தன் இலக்கிய நண்பரான பேரனின் இழப்புப் பற்றிய தனது நினைவுப் பதிகையொன்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர் களுக்கும் இடையே நூலிழை வித்தியாசம்தான். இரண்டு தரப்பாருக்குமே பொறுப்புணர்வும் தார்மீகக் கடமைகளும் இருக்க வேண்டும். இலங்கைத் தமிழ் எழுத்தாளர்கள்-பத்திரிகையாளர்களைப் பொறுத்த வரையில் பணத்துக்காக பேனை பிடிப்பவர்கள் அபூர்வம். இலக்கியத்துறையில் எழுத்தையே முழு வாழ்க்கைக்குமான தொழிலாகக் கொண்டவர்கள் கூட இங்கு பெருமளவில் சம்பாதித்தவர்கள் அல்லர். எழுதி யவை வெளிவந்தாலே போதும் என்றளவில் ஆறுதல் அடைந்தவர்களே அநேகம். பேரனும் எழுதினார். செய்திகள், கட்டுரைகள், சிறுகதைகள், நாவல், கவிதை, அறிக்கைகள், பேட்டிகள் - இப்படியாக பலதும் எழுதிக் குவித்தவர் பேரன். பேரனின் எழுத்துக்களை - குறிப்பாக கதைகளைக் கூர்ந்து படித்தால் - அவை நடைச்சித்திர மாகவே காட்சியளிக்கும். செய்திகளும் அறிக்கைகளும் எழுதிப் பழகியதனாலோ என்னவோ அவரது சிறுகதை களும் சில சமயங்களில் அவ்வாறு அமைவதுண்டு. இது-பத்திரிகையாளர்களுக்கு-ஆக்க இலக்கியம் படைக்கும் போது நேர்ந்துவிடும் அபாயம்தான். பேரனும் இந்த அபாயத்தில் சிக்குண்டார்.

இவர் அங்கம் வகித்த கொழும்பு, கலை இலக்கிய நண்பர் கழகத்தின் மாதாந்த சந்திப்புகளில் இவரது எழுத்துக்கள் விமர்சிக்கப்பட்டன. அச்சந்திப்புக்களை தனது வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொண்டவர் பேரன். பழகுவதற்கு இனியவரான பேரன், கூட்டங்களுக்கு வந்தால்- கூட்டத்தின் செய்திகள் நிச்சயம் ஏதாவது ஒரு இதழிலோ பத்திரிகையிலோ வெளியாகும் என திடமாக நாம் நம்பலாம்.

மனிதர்களுடன் பழகுதல் இனிய பண்பு. இந்தப் பண்பை இவரிடமும் நான் கற்றேன். இந்தப் பண்பை படைப்பாளிகள் எல்லோரிடமும் காண்பது அரிது. மாஸ்கோவில் நடந்த சர்வதேச மாணவர் இளைஞர் விழாவுக்குச் சென்று திரும்பிய எனக்காக 1986 நவம்பரில் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் நண்பர் ஸ்ரீதர்சிங் நண்பர் டொமினிக் ஜீவாவுடன் இணைந்து மூத்த எழுத்தாளர் வரதர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் தேநீர் விருந்தொன்றை ஏற்பாடுசெய்தார். அதில் கலந்து கொண்டு என்னை வாழ்த்திப் பாராட்டிய பேரனை-அச்சந்திப்பின் பின்பு நான் சந்திக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதுவே அவருடனான இறுதிச் சந்திப்பு.

பருத்தித்துறையில் வழக்கமாக மாதாந்தம் நடக்கும் அறிவோர் ஒன்றுகூடலில் இறுதியாக கலந்துகொண்ட பேரன் அன்றைய தினம் கையொப்பம் இடும் கோவையில் தனது பெயரை பதிவு செய்ய வில்லையாம். நிகழ்ச்சி முடிந்து மாலையில் அவர் அனைவரிடமும் விடைபெற்றுச்சென்றார். அன்றைய தினம் இரவு காலன் ஆட்லறியின் உருவத்தில் வந்து அவரது நெல்லியடி இல்லத்தை பதம் பார்த்தான்.

சொந்த மண்ணில் சொந்தங்களைக் கதறவைத்து எம்மையெல்லாம் கலங்க வைத்துப் பிரிந்த பேரனின் இழப்பு ஒரு புறத்தில் ஆழ்ந்த சோகமாயிருந்தாலும் மறுபுறத்தில் சிறிய மன ஆறுதல். ஏனென்றால் தனது உயிருக்குயிரான மனைவி மக்களுடன்தான் அவர் பிரிந்து சென்றார்."

நெல்லை க. பேரன் ஜூலை 1987இல் "துடிக்கும் இதயம்" என்ற தலைப்பில் ஒரு கவிதையை இயற்றி யிருந்தார். அது பின்வருமாறு அமைந்திருந்தது.

"சங்கத் தமிழாலே தாலாட்டுப்பாடி எந்தன்
தங்கக் குழந்தையை நான்
நித்திரையாக்கிவிட்டால்
திடீரென்று கேட்கும் வெடிச்சத்தம் எங்கோ---
அர்த்த ராத்திரியில் ஆசையாய் மணம்முடித்த
அன்பு மனையாளைக் கட்டியணைத்து
ஒரு முத்தம் தரவென்று
சிந்தையில் நினைத்திட்டால் கேட்கும்
ஒரு குண்டுச்சத்தம்
நெஞ்சு கலங்கி என் வேட்கையும் கலைந்து மிக்க
வேதனையோடு நான் முகத்தைத் திருப்பிடுவேன்
குண்டுகள் வந்து கூரையைத்
துளைத்தாலும் என்று

கட்டிலின் அடியினிலே
பிள்ளையை பெண்டிலை நான்
தள்ளியே சாக்கால் மூடிப்
பதுங்கியே பதகளிப்பேன்
கறுப்புக் கழுகுகள்
ஆகாயத்தில் வட்டமிட்டால்
ஐயோவென்று அலறும் இதயம்
எப்பெப்ப என்னென்ன ---
எங்கேயோ என்றெல்லாம்
எண்ணி ஏங்கித் தீய்ந்து கருகி
உருகி வாடும் பாழும் இதயம்
துளிர்க்கத் துடிக்கும் - ஆனால் நாட்டிலோ
ஈரளிப்பு இல்லையே ---"

இக்கவிதை வடித்து நான்காண்டுகளில் அவர் பயந்தபடியே அவரது குடும்பம் கூண்டோடு கலைக்கப்பட்டது. "குண்டுகள் வந்து கூரையைத் துளைத்தாலும் என்று கட்டிலின் அடியினிலே மனைவி பிள்ளைகளை தள்ளியே சாக்கால் மூடிப் பதுங்கித் தப்பும் வாய்ப்பு" அவருக்கு இலங்கை இராணுவத்தினால் வழங்கப்படவேயில்லை.

*1991* ஆம் ஆண்டு ஜூலை மாதம் *15* ஆம் நாள் இலங்கை இராணுவம் ஏவிய எறிகணை ஒன்று பேரனின் வீட்டில் வீழ்ந்ததில் பேரன், மனைவி உமாதேவி, மகன் உமாசங்கர் (*14* வயது), மகள் சர்மிளா (*7* வயது) ஆகிய நால்வரைக் கொண்ட பேரன் குடும்பம் கொல்லப்பட்டது எம்மினத்தின் சோக வரலாறு. குடும்பத்தின் பாசப் பிணைப்புடன் இருந்தவர், இறுதியில் தன் அகால மரணத்திலும்கூட பிரியமான தனது மனைவி, பாசம்மிகு குழந்தைகள் இருவரையும் தன்னுடன் கூடவே அழைத்துச் சென்றமை அவரது மறைவுச் செய்தியில் மேலோங்கி நிற்கும் நெஞ்சை உருக்கும் சோகமாகும்.

---

## ஓ! மிளகாய்ப் பழமே!

ஏக்கர் கணக்கில்
நீண்டு விரிந்த,
விஸ்வமடுக் காணிகளில்
தேயிலைச் செடிகள்போல்
காட்சி தரும் மிளகாயே!
உன்னையும் பாடவொரு
காலம் வந்ததடி!

உன் சிவப்பு அதரங்கள்
பசுமையான கன்னங்கள்
தென்னங் கீற்றிலே கிழித்த
ஈரக்குச்சி போல
மென்மையான பாதங்கள்
இத்தனைக்கும்
சேர்த்துத்தான்
இப்போது விலையா?

அன்புள் மிளகாய்ப் பழமே!
உன் சிவந்த அதரங்களை
நாடிக் கடித்திட்டால்...
என்னமாய் உறைக்கின்றாய்?
சும்மா சொல்லக்கூடாது
நல்ல உறைப்புத்தான்
அச்சம் மடம் உள்ள தமிழ்
மங்கைக்கு ஏற்ற
நியாயமான முறைப்பு
உனக்குள்ள கோபம் எம்
பெண்களுக்கும் வேண்டாமே?

## காற்சட்டை உத்தியோகம்

அந்நியர் ஆட்சியிலே
சுரண்டல் முதலாளிகளின்
கணக்கு வழக்குக் காரியங்கள்
பார்க்கவென்றே ஆக்கி வைத்த
காற்சட்டை உத்தியோகம்
"வைற் கொலர் ஜொப்" என்ற
மாயத்திரை போட்டு
மக்களையும் ஆட்டி வைக்க,
யாழ்ப்பாணக் கிராம மொன்றில்
விவசாயம் செய்து வாழும் - என்
அப்புவும் ஆத்தையுமாய் - என்னைக்
காற்சட்டை போடவென்று
கொழும்புக்கு அனுப்பி வைத்தார்
சம்பளம் நான் எடுத்துக்
காற்சட்டை வாங்கவென்று மெயின்
வீதிகளில் அலைந்து வந்தேன்
காற்சட்டை வாங்கி விட்டால்
சாப்பாட்டுக் கடைக்கும் - பின்னர்
அறை வாடகைக்கும் வேறு
சில்லறைத் தேவைகளுக்கும்
காசுக்கு என்ன செய்வேன்?
அரிசி, துணி எல்லாம்
ஆனைவிலை, குதிரைவிலை
சிங்கள ரியூசனுக்கும்
தனியாகக் காசு தேவை
வாழ்க்கைச் செலவுகளைத்
தாங்காமல் அழுகின்றேன்
அப்புடவிடங் காசு கேட்க
நாவெல்லோ கூசுகுது.

எம்.கே.முருகானந்தன்

# நெல்லை க. பேரனின் "வளைவுகளும் நேர்கோடுகளும்"




நெல்லை கா. பேரனின் "வளைவுகளும் நேர் கோடுகளும்" என்ற நாவலை நீண்ட பல வருடங் களுக்குப் பின்னர் இன்று வாசிக்க முடிந்தது. இதற்குக் காரணம் அவர் மறைந்து 33 வருடங்கள் கழிந்த நிலை யில் அவரது இலக்கியப் பங்களிப்பை நினைவுபடுத்தி மீளக் வெளிக் கொண்டுவரும் பணியை முன்னெடுக்கும் கலாமணி பரணீதரன் அவர்கள்தான். அவருக்கு நன்றி

இந் நாவலானது ஜனவரி 1978ல் வீரகேசரி பிரசுரமாக வெளிவந்திருக்கிறது. திரு.பாலசந்திரன் அவர்கள் பொறுப்பாக இருந்த அந்த காலகட்டத்தில் ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளை நூலாக வெளி யிடும் அற்புத பணியை வீரகேசரி நிறுவனம் அர்ப் பணிப்புடன் முன்னெடுத்தது. பல நூல்களை தொடர்ந்து வெளியிட்டு வந்தமை ஞாபகத்தில் இருக்கிறது. இது 62 பிரசுரமாக வெளிவந்தமையை நூலின் முன் பக்கங்களில் கண்டு கொண்டேன்.

இது வெளிவந்த காலம் நான் மருதடியில் டிஸ்பென்சரி ஆரம்பிக்க முன்னர் மந்திகை வைத்திய சாலையில் அரசமருத்துவனாக பணியாற்றிய காலம் அது. அந்நேரம் வியாபாரிமூலையிலேயே வசித்து வந்தேன். பேரனுடன் நேரடித் தொடர்பு ஏற்படாத காலம் அது. டொமினிக் ஜீவா, கணேசலிங்கன் போன்ற ஓரிருவரைத் தவிர வேறு இலக்கியத் தொடர்புகள் பெரிதும் ஏற்படாத காலம்.

ஆனால் வடமராட்சி மண் கொழும்பு நகர் ஆகிய இரண்டுமே சொந்த இடங்களாக ஊறிப் போனவை. அந்தக் காலத்தில் இருந்த யாழ் மண்ணின் வாழ்க்கையை மட்டுமல்லாது கொழும்பு வெள்ளவத்தை யையும் பேரனுடைய சித்திரிப்பின் ஊடாக மீள நினைவில் பரப்பக் கிடைத்தமையே இந்த நாவலால் கிடைத்த மிகப் பெரிய பலன் என்று சொல்லத் தோன்று கிறது. சுமார் 170 பக்கங்கள் வரை நீளும் நாவல் இது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது இது நண்பர்களாக யோகன்- சுகந்தி மற்றும் செல்லத்துரை- இளஞ்சியம் ஆகியோரின் வாழ்க்கை மற்றும் அவர்களின் காதல், அதில் ஏற்பட்ட சிக்கல்கள் ஆகியவற்றைப் பேசும் நாவலாக இருக்கிறது. ஆனாலும் அந்த ஊரின் தன வந்தராக விளங்கும் முத்துச்சடையரின் வாழ்வையே அதிகம் பேசுகிறது.

காதல் கதைகள் என்று சொன்ன போதும், காதலுக்கு அப்பால் யாழ் மக்களின் வாழ்வில் ஊடுருவி நின்ற, இன்றும் நிற்கும் மூன்று முக்கிய பிரச்சனைகள் நாவல் ஊடாக வெளிப்படுகிறது.

சீதனப் பிரச்சினை, காணிப் பிரச்சனை, மற்றும் சாதிப் பிரச்சனை ஆகியவையே அவை. இவை யாவுமே இந்த நாவலின் முக்கிய திருப்பங்களுக்கு காரணமாக இருக்கின்றன.

யோகனும் சுகந்தியும் சிறுவயது முதல் ஒன்றாக திரியும் அக்கம் பக்கத்து வீட்டுக்காரர் மட்டுமல்ல, சொந்த மச்சான் மச்சாளும் ஆவார்கள்.

"ஒரே பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள்.... பெரும்பாலும் மாமாவின் வீட்டிலேயே இருந்து வந் தான். ஒன்றாக மாங்காய் வத்தல் போட்டு சாப்பிடுவார் கள். மணிக்கணக்காக உட்கார்ந்து நாயும் புலியும் விளை யாடுவார்கள்" என பேரன் ஓரிடத்தில் விபரிக்கிறார்.

இது, அந்தக் காலத்தில் சிறுவர்களாகிய நாங்கள் சேர்ந்து விளையாடிய ஒளித்துப் பிடித்தல், கிட்டி அடித்தல், கெந்திப்பிடித்தல், ஓடிப்பிடித்தல், போன்ற பல விளையாட்டுகளையும் என் மனதில் கிளறிவிட்டதன் ஊடாக கதையோடு ஒன்றிவிடச் செய்தார். உங்களுக்கும் பல ஞாபகத்திலிருந்து வெளிவரவே செய்யும்.

அன்று யாழ் வீடுகளுக்கு இடையே வேலிகளே இருக்கும். மதில்கள் கட்ட ஆரம்பிக்காத காலம். அலம்பல் வேலி, கிடுகு வேலி, பனையோலை வேலி எனப்பல. சில இடங்களில் வெறும் கதியால்களே வேலிகளை பதிலீடு செய்யும். சிங்கள கிராமங்களில் வீடுகளுக்கு இடையே இன்றும் வேலியோ மதில்களோ இல்லாதிருப்பதை அண்மையில் கூட கண்டு வியந்தேன்.

ஆனாலும் அந்நாளைய வேலிகள் தொடர் பாடலுக்கு தடையாக இருப்பதில்லை. வேலிக் குள்ளால் கதை காரியம் பொருள் பரிமாற்றம் யாவும் நடைபெறும். யோகனின் அம்மாவான ஞானம், சுகந்தியை வேலிக்கு

அருகாக வரப்பண்ணுவதற்கு செய்த சின்ன விளை யாட்டை நான் சொல்ல போவதில்லை. கதையை படித்துப் பாருங்கள். அதே போல இரு குடும்பங்களுக் கும் இடையே உறவு முறிந்துவிட்டாலும், யோகன் ஊருக்கு வந்திருந்த வேளையில், இரகசிய காதல் பரிமாற்றம் நடைபெற வேலி தடையாக இருக்கவில்லை.

வேலிகள் சத்தம் சந்தடி இன்றி படிப்படியாக அரங்குவது எல்லைப் பிரச்சினைக்கு வழிகோலுவ துண்டு. முத்துச்சடையருக்கும் சுகந்தியின் குடும்பத்திற் கும் இடையேயான உறவு முறிந்ததற்கும் எல்லைப் பிரச் சனையே காரணமாக இருந்ததையும் குறிப்பிடலாம்.

அன்று முதல் இன்று வரை தொடரும் மற்றொரு விடயம் சீதனப் பிரச்சனை.

“பொடியன் முதலிலை ஓமெண்டவன் ... பிறகு இப்ப சீதனம் காணாது எண்டு பின்னடிக்கிறான்.” செல்லத்துரை என்ற பாத்திரம் சொல்வதிலிருந்து சீதனம் எப்படி கலியாணங்களை திசை திருப்புகின்றன என்பதை சுருக்கமாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

பெண் பிள்ளைகளை திருமண வாழ்க்கைக்கு தயார்ப்படுத்துவது அந்நாட்களில் முக்கிய பணியாக இருந்தது. ஏனெனில் இள வயதுகளிலேயே திருமணம் நடந்துவிடும். இது எப்படி குடும்பங்களைப் பாதிக்கும் என்பதை நினைத்துப் பார்ப்பதில்லை.

அதில் ஒரு காட்சியை பேரன் இவ்வாறு விபரிக்கிறார

“சமையல் தெரியாத பிள்ளைகளைக் கட்டிக் கொடுத்துப் பிறகு அவர்கள் புருஷன்மாரிடம் பேச்சுக் கேட்கவும், மாமியாரின் நக்கலுக்கும், குத்தல் பேச்சு களுக்கும் ஆளாவதை அவள் விரும்பவில்லை. எதிர் காலத்தில் சுகந்தியும் அப்படி ஆகிவிடக் கூடாது என்பதற்காக தனக்குத் தெரிந்த சமையல் கலைகளை யெல்லாம் கற்றுக் கொடுத்தாள்” என் தாய் சொல்வதி லிருந்து அந் நாளைய தாய்மாரின் பொறுப்புணர்வை பேரன் வாசகனின் கவனத்திற்கு கொண்டு வருகிறார் என்பதைப் பாராட்டலாம்.

அப் பகுதி பேச்சு வழக்கு சொற்களை ஆங்காங்கே பயன்படுத்துவது அலாதியாக உள்ளது. உதாரணத்திற்கு அட்டாதுட்டி என்ற சொல் ”அட்டா துட்டி வேலைகளெல்லாம் அவருக்கு அத்துப்படி”

எமது சமூகத்தை பாதிக்கும் மற்றொரு விடயம் சாதிப்பிரச்சினையாகும். இது பல வழிகளில் சமூகத்தில் ஊடுருவி நிற்கிறது. இந்த நாவலில் அதையும் தொட்டுச் செல்கிறார் கதாசிரியர். எதிர்கட்சியை பிரித்து ஆளும் தந்திரம் இன்று நேற்றல்ல அன்றே தொடங்கிவிட்டது. அதுவும் தேர்தல் காலம் என்றால் சொல்ல வேண்டிய தில்லை. நாவலில் கிராம சபை தேர்தல் வருகிறது. முத்துச்சடையர் இராசையாவின் வாக்குகளை பிரிப்பதற் காக இராசையாவுக்கு எதிராக சிறுபான்மை சமூகத்தி லிருந்து ஒருவரை தேர்தலில் நிறுத்துவதில் இறங்கியதை காணும் போது சாதிப்பிரச்சினையை ஒரு ஆயுதமாக மாற்றும் தந்திரத்தை உணர முடிந்தது.

இவ்வாறு யாழ்ப்பாணச் சமூகத்தின் பல சமூக சீர்கேடுகளை வெளிப்படுத்தி. அவற்றிற்கு எதிரான உணர்வலையை தூண்டிவிட நெல்லை கா.பேரன் தனது படைப்பைப் பயன்படுத்தியமையை காண முடிகிறது. இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கிற்கானது அல்ல, அது சமூக விழிப்புணர்வை நோக்கியதாக இருக்க வேண்டும் என்ற அவரது ஆத்மார்த்தமான கொள்கையின் வழியானது என்றே சொல்லத் தோன்றுகிறது.

இதன் தொடர்ச்சியாக, ஈழத்து எழுத்தாளர் களின் நூல்களை வாங்குவது என்ற செல்லத்துரையின் தீர்மானத்தையும் சொல்லலாம்.

ஈழத்து படைப்புகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும் என்ற கருத்து அந்தக் காலகட்டத்திலேயே முன்னிலைப் படுத்தப்பட்டது. அன்று நிலவியதும், அவன் கொள்கையுமாகிய முற்போக்கு சிந்தனைகளின் ஒரு பகுதியாகவே எம்மவரது நூல்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற சிந்தனையும் பரவ ஆரம்பித்திருந்தது.

ஏனெனில் அந்த காலத்தில், தமிழகத்து இலக்கியங்களிலேயே எம் மக்கள் மூழ்கிக் கிடந்தனர். கல்கி, ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற சஞ்சிகைகள் தாராளமாக விற்பனை ஆகின. கல்கி, நா.பா, சாண்டில்யன் போன்றோரது தொடர் நாவல்களை தேடி தேடி வாசித்தனர்.

இந்நிலையில் முற்போக்கு அணியினரே ஈழத்து இலக்கியத்தை ஆதரித்து வளர்பதில் முக்கிய பங்களித் தனர். நடுநிலை சிந்தனை உள்ளவர்களும் அதனை ஆதரிக்கவே செய்தனர். பேரனிடமும் முற்போக்கு சிந்தனைகள் இருந்தன. இருந்தபோதும் அதை அவர் வெளிப்படையாகப் பேசுவதில்லை. இருந்தாலும், அவரையறியாமலே அவரது படைப்புகளில் அவற்றின் தாக்கம் இருப்பதைக் காணலாம்.

ஈழத்து எழுத்துகளை ஆதரிக்க வேண்டும் என்ற கருத்தானது, என் வயதொத்தவர்களுக்கு அன்று விதைக் கப்பட்ட விதை. பெரு விருட்சமாக வளர்ந்து இன்றும் பயன்தரவே செய்கிறது.

அந்தக் காலத்தில் ஆலயங்களில் நாடகம் அல்லது கூத்து இரவிரவாக நடக்கும்” மக்கள் கூட்டமா கக் கலந்து இரசிப்பார்கள். “இரவு பூராவும் இருந்து பார்ப்பதற்கு பலர் ஓலைத் தடுக்குகளையும், சாக்குகளை யும் கொண்டு வருவார்கள்” என எழுதியதை வாசித்த போது மாணவப் பருவத்தில் அல்வாய் முத்துமாரி அம்மன் கோவிலில் நண்பர்களும் சேர்ந்து நானும் கூத்து பார்த்த நினைவுகள் வந்தன.

பிரதேச சபை வேட்பாளராக களமிறங்கிய முத்துச்சடையர், எலக்சன் செலவுகளுக்காக அந்தக் காலத்தில் ரூபா 20000 மட்டுமே எடுத்து வைத்ததாக வாசித்த போது இன்றைய நிலையில் இது தூசியும் பெறு மதியில்லாதது என பெருமூச்சு விடத்தான் முடிந்தது.

கொழும்பு வாழ்வின் பல சில கோலங்களும் நாவலில் வருகின்றன.

கொழும்பில் வேலை செய்யும் இளைஞர்கள் வீடுகளில் அறையை வாடகைக்கு எடுத்து வாழ்தல் அதில் ஒன்று. அது தவிர்க்க முடியாததும் கூட. ஆனால் அந்த

வாழ்வில் ஏற்படக் கூடிய சில பாலியல் இச்சைகளும், தவறான பாலியல் உறவுகளும் பல பிரச்சனைகளை ஏற்படுத்தக் கூடிய வாய்ப்புண்டு. மிகவும் கண்ணியமான செல்லத்துரையே வீட்டு சொந்தக்காரியின் பாலியல் இச்சையில் அகப்பட்டு தவறான பாலியல் உறவில் ஈடுபட நேர்வது அக்கதையின் ஒரு முக்கிய அம்சமாக வருகிறது. இது அவனது மனநிலையையே பெரிதும் பாதித்து வேறு இடம் மாறிச்செல்ல வைத்தது.

காலை ஆறு மணிக்கு வெள்ளவத்தை நெச வாலையின் சங்கொலி சத்தம் கேட்பது. கடற்கரைக்கு அண்மித்தான பகுதிகளில் இரவில் ரயிலின் கூவல் சத்தமானது தூக்கத்திற்கு இடையூறு செய்வது எனப் கொழும்பு வெள்ளவத்தை வாழ்வின் பல கோலங்களை யும் பேரன் கதையின் ஊடே சொல்லிச் செல்கிறார்.

அணிசேர நாடுகளின் உச்சி மகாநாடு கொழும்பில் நடைபெற்றது பற்றியும், அது சம்பந்தமாக மக்கள் பேசிக் கொள்வதும் கேணல் கடாபி அதற்கு வந்தமை பற்றிய குறிப்புகளாவன கதை நடக்கும் காலத்தை மறைமுகமாக சுட்டிக் காட்டுவதுடன் அது அன்றைய காலகட்டத்தில் பேசுபொருளாக இருந்ததை யும் சுருக்கமாக பதிவிடுகிறது.

நாவலை பெறுத்தவரையில் பல சிக்கல்களை புகுத்தி சுவார்ஸமாக கொண்டு செல்ல முயற்சிக்கிறார். ஆனால் கதை நேரடியாக சொல்லப்படுகிறது

நாவல் என்பது ஒரு இலக்கிய வடிவம். ஒருவர் அல்லது ஒரு சிலரின் வாழ்க்கையையும் நிகழ்வுகளையும் கற்பனையாக உரைநடையில் எழுதப்படுவது என்று சொல்லப்படுகிறது. வாழ்வின் பல பக்கங்களையும் அது பேசிச் செல்லும்.

அது இலக்கிய நயம் பெறுகிறதா அல்லது வெறும் கட்டுரை போல அமைகிறதா என்பது படைப் பாளனின் எழுத்தாற்றலில் தங்கியிருக்கிறது. தமிழ கத்திலும் ஈழத்திலும் பல சிறப்பான நாவலாசிரியர்கள் இருந்திருக்கிறார்கள். அண்மையில் பெருமாள் முருகனின் சில படைப்புகளை வாசித்து இரசித்தேன். அதே போல ஈழத்து படைப்பாளிகளான கருணாகர மூர்த்தி, நடேசன், நௌசாத் போன்றோரது படைப்பு களையும் வாசிக்க முடிந்தது. சிறந்த படைப்பாளிகள் பலர் இன்னும் எம்மிடையே இருக்கிறார்கள். அற்புதமான இலக்கியங்களைப் படைத்தனர், இன்னமும் படைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

நெல்லை க.பேரன் இன்னும் சில காலம் வாழ்ந்திருந்தால் அவரது வாசிப்பு பழக்கம் பரந் திருக்கும். நல்ல படைப்புகளுடனான ஊடாட்டம் அவரது படைப்பாற்லின் தன்மையையும் மேலும் உயர்த்தி இருக்கும் என்பது நிச்சயம். ஆனால் காலம் அவரை அகாலமாக கவர்ந்து சென்றுவிட்டது.

நாவல் மாத்திரம் அவரது துறையல்ல. கட்டுரைகள், சிறுகதைகள், நாவல், கவிதை, செவ்விகள் என பல துறைகளிலும் எழுதிக் குவித்த பல்லாண்மைப் படைப்பாளியாவார். இவற்றில் பல நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறான், சத்தியங்கள் ஆகிய இரண்டும் இவரது சிறுகதை தொகுதிகளாகும்.

விமானங்கள் மீண்டும் வரும், வளைவுகளும் நேர் கோடுகளும் ஆகிய இரண்டும் இவரது நாவல்களாகும்.

பேரனின் கவிதைகள், சந்திப்பு (நேர்காணல்கள்) ஆகியன இவரது ஏனைய நூல்களாகும்.

இவர் நெல்லியடியைச் சேர்ந்தவர். தந்தை கந்தசாமி, தாய் பறுபதம். நெல்லியடி மத்திய மகா வித்தி யாலயம், யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிலையம், சட்டக் கல்வி நிலையம் ஆகியவற்றில் கல்வி கற்றிருக் கிறார். இவர் 1960களில் வீரகேசரியிலும் நிருபராக கடமை ஆற்றியதாக அறிகிறேன். அதன் பின்னர் 1966 இல் சிறிது காலம் அஞ்சல் திணைக்களத்தில் பணியாற்றினார். பின்னர். குவைத் நாட்டிலும் சிறிது காலம் பணியாற்றியுள்ளார்.

எல்லோருக்கும் இனியவரான நெல்லை க. பேரன் எங்கள் நட்பு வட்டத்தில் முக்கியமானவர். அக் காலத்தில் நாங்கள் மாதாந்தம் நடாத்திய அறிவோர் நிகழ்வுகளில் தவறாமல் பங்கெடுப்பராகவும் இருந்தார். 1991 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 15ம் திகதி நடந்த நிகழ்விலும் கலந்துகொண்டார். அன்று சற்று தாமதமாகவே நிகழ்வுக்கு வந்தார்.

கூட்டம் முடிந்த பின்னரும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தார். மறுநாள் நெல்லியடி சென்றல் கல்லூரிக்கு அருகில் தங்கள் வீட்டிற்கு, வீடு மாறப் போவதாகவும், அந்த வேலைகள் காரணமாகத்தான் கூட்டத்திற்கு வர தாமதமானதாகவும் சொன்னார்.

மறுநாள் காலை தாங்க முடியாத துயரச் செய்தி வந்தது. இராணுவம் ஏவிய எறிகணை வீட்டின் மீது விழுந்ததால் பேரனும் அவரது முழுக் குடும்பமும் கொல்லப்பட்டனர். பேரனும் அவரது மனைவி உமாதேவி, மகன் உமாசங்கர் (14 வயது), மகள் சர்மிளா (7 வயது) ஆகிய நால்வரும் ஸ்லத்திலேயே பலியானார்கள்.

இப்படியான பேரிழப்பை எப்படி தாங்கிக் கொள்வது?

அன்றைய தினம் எமது கூடலில் கலந்து கொண்ட அவர் வரவுப் புத்தகத்தில் கையொப்பம் இடவில்லை என்பது பின்னர் தெரிய வந்தது. இதற்கு அர்த்தம் தேட முடியுமா? உணர்வுகளுக்கு அப்பால் பகுத்தறிவு ரீதியாக காரணம் ஏதாவது தேட முடியுமா.?

அவர் காலமாகி சுமார் ஒரு மாத காலத்தின் பின்னர் பருத்தித்துறை சிவன் கோவிலடி பருவதவர்த்தனி மண்டபத்தில் அவருக்கு நினைவஞ்சலிக் கூட்டம் வைத்தோம். அவர் பற்றிய ஒரு சிறு பிரசுரமும் வெளியிட்டோம். போர்ச் சூழலில் என்னிடமிருந்த அந்த பிரசுரத்தின் பிரதியும் தொலைந்துவிட்டது.

பிரசுரம் தொலையலாம். ஆனால் அவர் நினைவுகள் நாம் தொலையும் வரை நினைவிலிருந்து அகலவே அகலாது.

அவரது இல்லாமையின் தணல் எம்மை தீய்த்துக் கொண்டே இருக்கிறது.

கொற்றை பி.கிருஷ்ணானந்தன்

# விமானங்கள் மீண்டும் வரும் நெல்லை க.பேரனின் குறுநாவல் மீண்டும் ஒரு குறும்பார்வை




*1985*ல் வெளிவந்த இக்குறுநாவல் “ஈழநாடு” பத்திரிகையும் யாழ்-இலக்கிய வட்டமும் இணைந்து நடாத்திய இரசிகமணி கனகசெந்திநாதனின் நினைவுக்குறுநாவல் போட்டிக்காக எழுதப்பட்டது. இக் குறுநாவலுக்கு முதற்பரிசும் கிடைக்கப்பெற்று “ஈழநாடு” வாரமலரில் தொடர்ச்சியாகப் பிரசுரமாகி *18.12.1985*ல் நூலுருவம் கண்டது.

*36* பக்கங்களை மட்டும் கொண்ட இக் குறுநாவலுக்கு செ.யோகராசா அவர்கள் (பேராசிரியர்) அறிமுக விமர்சனமொன்றை வழங்கியுள்ளார்.

நெல்லை க.பேரன் ஈழநாடு, வீரகேசரி, பத்திரிகைகளுக்கு செய்தியாளராகச் செயற்பட்டு வந்ததாலோ என்னவோ ஒரு காலத்தில் பரபரப்பாகப் பேசப்பட்டு வந்த பேரனின் இலக்கியப் படைப்புக்கள் பிற்காலத்தில் பேசப்படாதவையாகப் போனதும் அவரது வாழ்வுபோல ஓர் அவலமே.

யுத்தம் தந்த அனர்த்தங்களினூடே ஜேர்மனி, இத்தாலி, சுவிஸ், இங்கிலாந்து போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அவுஸ்திரேலியா, கனடா போன்ற குடியேற்ற நாடுகளுக்கும் நம் இளைஞர்கள் புற்றீசல் போல தஞ்சம் கோரிப் புறப்பட முன்னர் சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கு சிறியளவிலும், சவூதி, குவைத், டுபாய், டோகா, கட்டார் முதலான நாடுகளுக்குப் பெருமளவிலும் தொழில் நிமித்தம் நாட்டைவிட்டு விமானம் ஏறினார்கள்.

தமது குடும்ப உறுப்பினர்களின் மேம்பாடு கருதி இந்நாடுகளில் ஏதோ ஒரு தொழில் சார்ந்து நம் இளைஞர்கள் பட்ட துன்பங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

பெண்களுக்கும் அதேகதிதான். ஆனால் யாழ்ப்பாணத்தில் குறிப்பாக வடமராட்சியிலிருந்து பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைக்காகச் சென்ற உதாரணங்கள் அறவே இல்லை என்றே கூறிவிடலாம்.

நெல்லை க.பேரன் வடமராட்சி நெல்லியடியைச் சேர்ந்தவர். நமக்கு நன்கு பரிச்சயமானவர். இக் குறுநாவலின் நாயகன் குவைத்தில் படுகின்ற கடினமான அனுபவங்கள் தனது சொந்த அனுபவங்களாகவே பேரன் குறிப்பிடுகின்றார். ஆயினும் மூன்று சகோதரிகளையும் கரைசேர்ப்பதற்காகத் தனி ஒருவனாகக் கதையின் நாயகன் சங்கர் குடும்பப் பொறுப்போடு சிலுவை சுமப்பது என்பது நெல்லை க.பேரனின் சொந்த அனுபவமல்ல என்பதை நான் நன்கறிவேன். அன்றைய காலத்து இளைஞர்களை, அல்லது தன்னோடு தொழில் புரிந்தவர்களை முன்வைத்து சிருஷ்டிக்கப்பட்ட யதார்த்தத்திற்கு அண்மித்ததான ஒரு கதை என யூகிக்கிறேன்

சங்கர் தனது சகோதரிகள் மூவரையும் கரைசேர்க்க கனக்க உழைக்கவேண்டி குவைத்திற்குப் புறப்படுகின்றான். எப்போதும் போலவே வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் முகவரினால் மூன்று முறை அலைக்கழிக்கப்பட்டுத்தான் பயணம் சரி வருகின்றது

முதற் தடவை பயணம் சொல்லிப் புறப்படும் போது கொடிகாமம் ரயில் ஸ்ரேசன் வரைக்கும் வந்து வழியனுப்பிவைத்த தாயார், மற்றும் மூன்று சகோதரிகளும் பயணம் சரிவராமற்போக மூன்றாந்தடவை ஊரில் பஸ் நிலையம் வரைக்குமாவது வரவேயில்லை என்று குறிப்பிடுவது பலருக்கும் ஏற்பட்ட அனுபவம்தான்.

தொலைபேசி நடைமுறைகள் வீடுகளில் புழக்கத்தில் இல்லாதகாலத்தில் ஊரிலிருந்து வரும் கடிதங்களை, அவை கொண்டுவரும் புதினங்களை அங்கே ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதும், அங்கிருந்து வரும் கடிதங்களை, அவற்றோடு சேர்ந்துவரும் வெளிநாட்டு வங்கிக் காசோலைகளை (ட்றாவ்ற்) இங்கே குடும்பத்தினர் எதிர்பார்த்திருப்பதும் அழகாக இந்நூலில் சொல்லப்பட்டுள்ளது.

குவைத்திற்குப் பயணப்படுவதற்காக வைத்த அடைவு நகைகளை மீட்பதற்கும் சகோதரிகளின்

திருமணத்திற்குமாக அங்கே ஓவர்ரைம் செய்வதும் கப்பலின் கீழே கொட்டுண்ட சீமெந்தைப் பைக்கற்றுகளில் அள்ளிக் கொடுப்பதும், கப்பலின் அடித்தளத்தின் கறள்களைச் சுரண்டியும் கிணறு போன்ற "ஹர்ச்சுக்குள்" இறங்கி கட்டிபட்ட சீமெந்தைக் கடப்பாரினால் அடித்து நொறுக்கித் தூளாக்கியும் கஷ்டப்பட்டு வேலை செய்வதையும் லீவு நாட்களில் கொம்பனி நிர்வாகத்திற்குத் தெரியாமல் கார் கழுவுதல் போன்ற வேலைகளைச் செய்வதையும் மிக இலாவகமாகச் சித்திரித்துள்ளார் நூலாசிரியர். இன்றும் இந்நிலைமை மேலைத்தேய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்த நம்மவர்களுக்கும் பொருந்துவது உண்மையே.

மத்தியகிழக்கு நாடுகளுக்குப் பணிப் பெண்களாகச் செல்லும் பெண்களின் வாழ்க்கை முறையும் ஒருசில பெண்கள் வருமானத்திற்காகவும் ஊரிலிருக்கும் தமது குடும்ப உறுப்பினர்களின் தொழில் வாய்ப்புக்களுக்காகவும் சூழலின் நிர்ப்பந்தங்களினாலும் முறைகேடாக வாழ்வதைச் சர்வசாதாரணமாகக் கருதுவதாக நாவலிற் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் அங்கு பல பெண்கள் பல நெருக்கு வாரங்களுக்குள் தொழில் புரிய அந்தப் பெண்களின் வருமானத்தில் புருஷன்மார் வேறு பெண்களுடன் சுகித்திருந்து பிரச்சினைகளில் மாட்டுவதும் தம்பிள்ளை களை ஒழுங்காக வளர்க்காமல் குடித்துக்கூத்தடிப்பதும் பத்திரிகைகள் வாயிலாக இன்னும் நாமறியும் வழமையான சமாச்சாரமாகப் போயுள்ளன.

அந்தோனி எனப்படும் சிங்களப்பெடியன் விமானத்திலேயே பக்கத்து இருக்கையில் இருந்த ஒரு பெண் பயணியுடன் நெருக்கமாகப் பழகுவதும் குவைத்தில் பெண்களுடன் சரசசல்லாபம் புரிவதும் குடும்பத்தினர் பற்றிய சிந்தனையில்லாமல் தனது முழு வேதனத்தையும் செலவழிப்பதையும் நூலாசிரியர் தனது நாவலில் எடுத்துரைக்கின்றார்.

செ.யோகராசா அவர்கள் தனது அறிமுக விமர்சனத்தில் "மத்திய கிழக்கு நாடுகளில் முறைகேடாக வாழும் ஆண்கள் அந்தோனிகளும் சில்வாக்களும் மட்டுந்தானா ஆறுமுகங்கள் இல்லையா" என்று கேள்வி எழுப்புகின்றார்.

இக்கேள்விக்கு நெல்லை க.பேரன் தன் என்னுரையில் "ஏன் இல்லை?... நீங்கள் அந்தோனி என்று வாசிப்பதை ஆறுமுகம் என்றோ அகமது என்றோகூட வாசிக்கலாம். நான் ஒன்றும் ஆறுமுகங்களுக்கு வக்காலத்து வாங்கவில்லை. என்னோடு கூடுதலாகப் பழகிய சிலரை மட்டும் ஞாபகம் வைத்து அவர்களது பெயர்களில் சிறு மாற்றம் செய்து எழுதினேன் அவ்வளவுதான்" என்கிறார்.

இக்கதையின் நாயகன் சங்கர் சற்று வித்தியாச மானவனாக, முற்போக்குச் சிந்தனையாளனாக சித்திரிக்கப்படுகிறான். தனது சகோதரி திலகத்திற்குப் பேசப்பட்ட மாப்பிள்ளை சாதி கொஞ்சம் குறைவுதானாம் என்று வீட்டிலிருந்து வந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது கண்டு சங்கரின் மனம் இப்படிச் சிந்திக்கிறது "நாங்கள் இஞ்சை செய்யிற வேலையளைக் கண்டால் ஊரிலை துரும்பனும் இந்த வேலையளைச் செய்வானோ எண்டு கேட்பினம். இஞ்சை கக்கூசு கழுவினாலும் ஊருக்கை வரேக்கை நல்ல வெட்டுப் போட்ட சங்கிலியும் ஹொண்டாவும் ஹெல்மெற்று மாகத் திரிஞ்சால் அந்தக் கௌரவம் ஒன்றே மாப்பிள்ளை அந்தஸ்த்தைத் தந்துவிடும்".

ஆயினும் இந்த மாப்பிள்ளை சங்கர், திலகம் ஆகியோரின் சாதிக்குள்ளேயே சாதி குறைந்த ஒரு வராகத்தான் இருக்கமுடியும் என்றே நான் யூகிக்கிறேன். அந்த நடைமுறை எல்லாச் சாதியமைப்புக்குள்ளும் காணப்படுகின்ற ஒன்றுதான். ஆனால் சங்கரின் சிந்தனையில் "துரும்பனும்" என்று ஊரைச் சாட்டிக் குறிப்பிட்டாலும் அந்த அழுத்தம் வாசகர் மனதில் ஏதோ ஒன்றைச் சொல்லிச் செல்வதாகவே படுகிறது.

ஒருமுறை புறோக்கர் முருகேசம்மானிடம் "நீங்கள் சாதிக்காறர் எண்டாப்போல உங்கடை பிள்ளை யளுக்கு அவங்கள் அடிக்காமல் விட்டவங்களே...... எத்தனை தடவை அடி உதை வாங்கினாலும் உங்களுக்கு இன்னும் அந்தப் பரம்பரைப் புத்தி போகேல்லை" என சங்கர் கூறுகிறான். வாசிக்க நன்றாகத்தானிருக்கிறது. உண்மையாகவும் இருக்கக்கூடும்.

ஆனால் சங்கரின் மூன்றாவது சகோதரி கமலா ஒரு சலவைத் தொழிலாளியின் மகனைக் காதலிக்கும்போது அவனை அப்படியே ஏற்றுக்கொண்டு தன் தங்கைக்குத் திருமணம் செய்துவைப்பதை வைத்து செ.யோகராசா அவர்களும் இதை ஒரு சீர்திருத்த நாவல் என்று குறிப்பிட்டிருந்தாலும் கூட காதலர்கள் தாங்கள் வீட்டைவிட்டு ஓடித்திருமணம் செய்திருந்தால் அது வேறு விடயம். ஆனால் பெண்வீட்டாரே அதை ஏற்று அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பது என்பது வடமராட்சியில் இப்போதுங்கூட அதாவது இந்நாவல் வெளிவந்து நாற்பது வருஷங்கள் ஆகின்றபோதும் கூட சாத்தியமற்ற - யதார்த்தத்திற்குப் புறம்பான ஒன்றாகவே நான் பார்க்கிறேன். இங்குள்ள சில ஆலயங்களினதும் அவற்றின் நிர்வாகங்களின் கீழுள்ள திருமண மண்டபங்களினதும் நடைமுறைகளைப் பார்க்கும்போது நமக்குச் சீற்றத்தை ஏற்படுத்துவதில்லை. மாறாக "பாவம் கணேசா, பாவம் முருகா" என்ற அனுதாபத்தையும் சிரிப்பையுந்தான் ஏற்படுத்துகின்றன. இச்சந்தர்ப்பத்தில் ஜீவநதி பரணீதரனின் "உயிரினும் மேலானது" என்ற சிறுகதை என் சிந்தனையைக் கிளறி மீள்வாசிப்புக்குத் தூண்டுகிறது.

சங்கர் தனது சகோதரிகள் திலகம், புவனம், கமலம் ஆகிய மூவருக்கும் திருமணம் செய்துகொடுக்க அவனுக்கும் முப்பத்திமூன்று வயதாகிறது.

சங்கர் ஊருக்கு வந்தபோது முருகேசம்மான் பேச்சுக் கொடுக்கிறார். "தம்பி சகோதரங்களுக்காக உழைச்சு உரமேறின உன்னைப்போல பெடியங்கள் இண்டைக்குக் கனபேர் யாழ்ப்பாணத்திலை இருக்கினம். நீங்கள் மனந்தளராமல் உழைச்சுக் கடைசியிலை

உங்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடிக் கொள்ளவேணும். நீ இந்தமுறை உழைச்சுக்கொண்டு வா தம்பி. நான் இந்த ஊரிலை ஒரு நல்ல பெட்டையாகப் பார்த்துவைக்கிறன்"

"நல்லது அம்மான், நான் கட்டாயம் திரும்பி வருவன்"

சங்கர் மறுபடியும் பயணமாகி விட்டான். விமானம் மறுபடியும் ஊர்ந்து உயர்ந்து உறுமிக் கொண்டே வானத்தில் மிதக்கிறது என நாவல் நிறைவு பெறுகிறது.

"நான் தேடவில்லை காண்கிறேன்" என பிகாஸோ கூறுகிறார். இதன் அடிப்படையில் பார்த்தால் நெல்லை க.பேரன் இக்குறுநாவலைத் தனது அனுபவ வெளிப்பாடாகத் தந்துள்ளார். இந்நாவலின் கதா மாந்தர்களை நடமாடும் சாதாரண மனிதர்களாக இன்றும் நாம் தரிசிக்கலாம்.

தங்கள் தங்களின் குடும்பத்தின் உயர்ச்சிக்காக தங்களின் வாழ்க்கையைத் தள்ளிப் போட்டுக்கொண்டே போகின்ற சாதாரண இளைஞர்களின் (உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி) நிலைமைகளை அப்படியே கொப்பளித்திருக்கிறது இக்குறுநாவல்.

மத்தியகிழக்கு நாடுகளில் நம்மவர்கள் படும் அவலங்களை, அவர்களது கனவுகளை முறையாகச் சித்திரித்த ஒர் இலக்கிய ஆவணமாக இந்நாவலைக் கருதலாம்.

தான் பெற்ற அனுபவங்களை வாசகர்களது மனங்களில் ஆழமாகப் பதித்துச் செல்வதற்காக நெல்லை க.பேரன் கையாழுகின்ற உத்தி, மொழி, வாக்கிய அமைப்புக்கள் என்பன கனகச்சிதமாக அமைந்துள்ளன.

எனினும், சங்கர் என்னும் தனிமனித பாத்திர வார்ப்பில் சம்பவங்களுக்கு மேலாக மேலும் கவனம் செலுத்தியிருக்கலாம் என்ற எண்ணமும் எனக்கு ஏற்படுவதையும் கூறித்தான் ஆகவேண்டும்.

பொதுவாக நெல்லை க.பேரனின் ஒட்டு மொத்தப் படைப்புகளின் தரம் பற்றிய மாறுபட்ட கருத்துகள் நிலவினாலும் இன்னும் தனது வாழ்வியல் அனுபவங்களைச் செழிப்புடன் தனது படைப்புக் களாகத் தரவேண்டும் என்று நாம் கேட்கமுடியாதபடி அவரது வாழ்வு நடுப்பகலில் நடந்த அஸ்தமனமாக முடிவுறுத்தப்பட்டமை பெருங்கொடுமை.

---

## குத்துவிளக்கு


விழுதுகள் பரப்பி நின்ற
விருட்சமொன்று
சாய்ந்துவிட்டது...
ஆதிக்கப் புயலின்
"செல்" லடியில் சிக்கி
அடியோடு சாய்ந்த
ஆலவிருட்சம் பேரன்...
இலக்கிய நெஞ்சங்கள்
எல்லோர்க்கும் அவன்
இனிய சர்க்கரை...
இலக்கியக் கூட்டம்
எதிலும் முன்னிருக்கும்
குத்துவிளக்கு... ...
சிறுகதை நாவல்
கட்டுரை கவிதை
அத்தனையிலும்
அவன் கை...
நினைவுகள் சாவதில்லை
பேரன் படைப்புகள்
நிலைத்து வாழும்..!

- வி. ரி. இளங்கோவன்
(1991)

## நெல்லை க. பேரன் நினைவாக..!



மு.அநாதரட்சகன்



# நெல்லை க.பேரனின், "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" சிறுகதைத் தொகுப்பின் மீதான பார்வை

மனித சமூகம் தன் அனுபவங்களை பகிர்வு செய்தலை கதை எனப்படுகிறது. கதை சொல்லுகின்ற வழக்கம் நீண்ட காலமாக இருந்து வரும் ஒன்று.மரபு ரீதியாக சொல்லப்பட்டு வந்த கதைகளுக்கு மாற்றாக சொல்லப்பட்டதை "புனைகதை" என்பர். சமூகத்தில் - குடும்ப நிறுவனத்தில் மாற்றங்கள் ஏற்பட்டு தனிமனிதன் முதன்மை பெறும் காலத்தில் அவனுக்கும் சமூகத்துக்கும் உள்ள உறவினை எடுத்துக்காட்டும் முகமாக புனை கதைகள் தோன்றின. சிறுகதையும், நாவலும் இத்தகைய நவீன காலத்தது புனைகதைகளாகும். அதிலும் சிறுகதை என்பது உலகப் பொதுவான ஓர் இலக்கிய வடிவம். இது தமிழில் அறிமுகமாகி இன்று பல்வேறு பரிமாணங்களில் வளர்ச்சியடைந்துள்ளது. காலந்தோறும் சமூக, பொருளாதார, அரசியல் நிலமைகளால் பாதிக்கப்பட்டு செம்மையும், பொலிவும் பெற்று, உருவ அடிப்படை யிலும், உள்ளடக்கத் தேர்விலும் மாற்றம் கண்டு வருகிறது.

ஈழத்தமிழிலக்கிய வெளியில் எழுபதுகள் முக்கிய காலகட்டமாகும். இக்காலச் சிறுகதைகளின் கருப்பொருட்கள் விரிவு கூர்மையும் அடைந்திருந்தன. மனிதன் இதுவரை சிந்திக்கத்தவறியிருந்த பல அம்சங் களை எழுபதுகளின் சிறுகதைகள் கொண்டிருந்தன. முன்னர் எழுதத்தயங்கிய விடயங்களை எல்லாம் இக்காலத்தில் எழுதவந்தவர்கள் தம் சிறுகதைகளில் அலச முன்வந்தனர். மனிதனின் வாழ்வியல் தொடர்பான சிக்கல்களைச் சொல்ல வந்தது போலவே, இக்கால கட்டச் சிறுகதைகள் வர்க்க முரண்பாடுகளையும் எடுத்துக் காட்டின. அத்துடன் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், நசிவுப் போக்குகளையும் தெளிவான பிரக்ஞையுடன் தமது சிறுகதைகளில் படைத்துள்ளார்கள். மனிதநேயம், கிராம வாழ்வின் உள்முரண்கள், நகர வாழ்வின் அவலங்கள், மனிதரின் போலி முகங்கள் என்பன இக்காலகட்டக் கதைகளின் தனிப்பண்புகளாக இருந்தன. மிக நீளமான பந்திகளில் சொல்லப்பட்ட விடயங்களைத் தவிர்த்து. சிறிய வசனங் களில் சொற்செட்டுடன் எளிய சொற்களில் எழுதுகின்ற போக்கும் எழுபது காலகட்டச் சிறுகதைகளில் சகஜமாகின.

அவ்வகையில் நெல்லை க.பேரனும் எழுபது களில் எழுத வந்தவர். அக்காலப் பகுதியில் அவர் எழுதிய பன்னிரு கதைகளை "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகி றாள்" என்ற தொகுப்பாக 1975ல் வெளியிட்டுள்ளார். பேராசிரியர் க.சைலாசபதி சிறப்பான முன்னுரை யொன்றை அதில் எழுதியிருந்தார். அன்று தொகுப்பின் தலைப்புக்காக பலராலும் பேசப்பட்டமை நினைவி லுள்ளது.

தொகுப்பிலுள்ள கதைகள் எல்லாம் ஏதோ வகையில் அக்கால மனித மதிப்பீடுகளின் மீது கேள்விகளை எழுப்புவனவாக உள்ளன. ஏறத்தாள ஐம்பது வருடங்களுக்கு மேல் எழுதப்பட்ட அவரது கதைகள் இன்றையகால நடப்பிலும் புதிய பொருள் கொள்ள ஏதுவாய் இருக்கின்றன. இக்கதைகள் அனைத்திலும் வடமராட்சி மண்ணுக்குரிய பண்பாட்டுப் பின்புலத் தினை நுகர முடிகிறது. குறிப்பாக இக்கதைகள் பலவும் அன்றைய விவசாயப் பொருளாதாரத்துக்கும், மனிதர் களுக்கு மிடையிலான தொடர்புகளை எடுத்தியம்பு கின்றன. கூடவே கதைகள் தன்னிலை சார்ந்த விவரணப் பாங்கில் எழுதப்பட்டவைதான். எழுதுபவன் தன்னைப் பற்றியே எழுகிறான் என்கிற கூற்று இங்கே பொருந்தி வருகிறது. நெல்லை க.பேரனின் இக் கதைகளில் யதார்த் தம் என்பது ஒரு இழையாகவும், கிராமிய வாழ்வின் நெருக்கடிகள் இன்னொரு இழையாகவும் ஓடுகிறது.

அக்கால புகையிலைச் செய்கையின் நுட்பங் களை விவரணப்பாங்கில் கூறும் கதை "குடிலின் அடியில்" என்பது இக்கதை ஒரு விவசாயக் குடும்பத்தின் பாடுகளை விளக்குகிறது. "கடவுள் உள்ளே இருக்கிறார்" என்ற கதை சாதியம் பற்றியது. ஆலப்பிரவேச முயற்சியொன்று இரு பகுதியாருக்கிடையில் மோதலாக வெடித்து, இறுதியில் போராட்டம் தோல்வியில் முடிகிறது. இக் கதையில்

ஆசிரியர் சொல்ல வருகின்ற செய்தியும் கருகலாகவே உள்ளது. கோயில் மாபாசாரம் என்பது சாதியா சாரத்துடன் பின்னிப்பிணைந்துள்ளது என்பதை இக்கதை கூற முனைகிறது. தகைமை இருந்தும் அரசாங்க உத்தியோகத்தைப் பெறுவதில் உள்ள இடர்ப்பாடு களைக் கூறும் கதை "ஒரு பட்டதாரி நெசவுக்குப் போகிறாள்" என்கிற கதை வேலையற்ற பட்டதாரி ஒருத்தியை வறுமையும், தனிமையும் வாட்டி வதைப்பதை விபரிக்கிறது. பெற்றோரை விடவும் கல்வி, பதவி, பணம் என்பவற்றால் உயரும்போது, பெற்ற பிள்ளைகள் கூட பெற்றோரைக் கவனிக்காத மன நிலைக்கு வந்து விடுகிறார்கள். உயிரோடு இருக்கையில் தகப்பனைக் கவனிக்காதவர்கள் இறந்தபின் அவரது அந்தியேஸ்டிக் கிரியையை ஆடம்பரமாகச் செய்கின்ற அபத்தத்தை "கௌரவம் என ஒன்று" என்கிற கதை கூறவருகிறது. தொகுப்பில் இலட்சிய பாங்கான இரு கதைகள் உள்ளன. ஒன்று "ஒரு படித்தவிவசாயியின் பயணம்" மற்றது, "ஒளியை நோக்கி" என்பது எழுபதுகளில் உருவான விசுவமடு படித்தவாலிபர் திட்டம் இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபட வைத்து புதிய பாதையை திறந்து விட்டதன் விளைவுகள் பற்றிக் கூற வருகின்றன. இக்கதைகளில் கருத்துப்பிரசாரம் சற்றுத்தூக்கலாக இருந்தாலும், அக்கால கட்ட சமூகத்தில் ஏற்பட்ட சலனங்களை எதிரொலிக்க முற்படு கின்றன. "எண்பது ரூபா" என்பது அரச உத்தியோகத் தரின் மனவோட்டத்தில் நகரும் கதை. பற்றாக் குறையான சம்பளத்துடன் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்ய முடியாது தவிக்கும் தவிப்பை வெளிப் படுத்துகிறது. குலப்பெருமையில் ஊறித்திளைக்கும் ஒருவரின் கதை "குலப்பெருமை" என்பது தன் குடும்பப் பெருமையை கோயில் திருவிழாவில் தூக்கி நிறுத்தப் போய், இறுதியில் தன் ஒரே மகளையும் பறிகொடுத்து நிற்கும் அவலம் இதில் சிறப்பாக சித்திரிக்கப்பட்டுள்ளது.

நெல்லை க.பேரனின் கதை மாந்தர்கள் பன்முகத் தன்மையானவர்கள். படித்துவிட்டு வேலையற்றிருப்ப வர்கள், அதிகாரம் ஆதிக்கம் மிக்க மனிதர்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள், பொறுப்புடன் நடந்து கொள்ளும் பெண்கள், அப்பாவி மனிதர்கள் எனக்கதைகளில் பல தரப்பட்ட வகைமாதிரி மனிதர்கள் தங்களது இயல்புகளோடும், ஒழுக்கத்தோடும், ஒழுக்கமின்மையோடும் வந்து போகிறார்கள். அத்துடன் மனிதர்களின் சிறப்பை, முரண்களை, அதிலுள்ள சௌ கரியத்தை, அவலங்களை வாசகன் உணர்ந்துகொள்ள வைக்கும் வகையில் கதாமாந்தர்களைப் படைத்துள்ளார்.

கிராமிய வாழ்வு பற்றிய கதைகளில் அதற்குரிய சொல்லாடல்களை படைப்பு மொழியாக ஆதாரப் படுத்தியுள்ளார். தொகுப்பிலுள்ள கதைகள் எல்லாம் புறஉலகை உள்ளது உள்ளபடி விபரணப்பாங்கில் பதிவு செய்கின்றன. இதுவே நெல்லை க.பேரனின் எழுத்துப் பாணியாக உள்ளது. இக்கதைகள் அன்றைய சமுதாயத் தில் நிகழ்ந்த புதியமாற்றங்களின் வேசத்தைப்புரிந்து கொண்டு பழையவற்றை கட்டுடைத்து, மாற்றத்தோடு கூடிய மறுமலர்ச்சியை வரவேற்கும் விதத்தில் எழுதப்பட்டுள்ளன என்பது சிறப்புக்குரியது. இதுவே இத்தொகுப்பிலுள்ள கதைகளுக்கு வளம் சேர்த்துள்ளது. ஆக, வாழ்வின் முழுமையான தரிசனமாவன்றி, ஒரு சம்பவம் எப்படி வாழ்க்கையின் குறுக்கு வெட்டுமுகமாக, அமைந்து முழுவாழ்க்கைக்கும் அர்த்தம் தருகிறது என்பதனை சாதாரணமாகவே தனது கதைகளில் நெல்லை க.பேரன் பதிவு செய்துள்ளார் என்பது கவனிப்புக்குரியது.

# சாதி சாதி சாதி


பனைகூடிய எங்கள்
யாழ்ப்பாணக் கிராமங்களில்
இன்றும் நடப்பதுதான்
வீடு கட்டக் கிணறு வெட்டக்
கூலிக்காய் ஆள் பிடிப்பார்
வீடு கட்டியானவுடன் - சாமர்த்தியமாக நல்ல
சாந்தியொன்று செய்துவிட்டுக்
கட்டியவரைத் தள்ளி வைப்பார்
உள் நுழைதல் பாவம் என்பார்
கீழ்சாதி என்று சொல்லிக்
கிணற்றிலும் அள்ளவிடார்
இத்தகைய மக்களிடம் - இனிக்
கூலிக்கும் போகாதீர்.

சாதி சாதியென்று
சாகும்வரை சொல்லி வைப்பார்
செத்த பின்னர் இவர் சாதி
என்னவென்று செப்புவீரோ?
"கோப்பறேஷன்" சென்று இவர்
இருகரம் நீட்டி அந்தப்
பச்சைப் பிளா பிடித்துக் கொண்டால்
உறிஞ்சிக் குடிக்கையிலே
சாதியொன்றும் பார்க்க மாட்டார்
வீடுகளில் வீதிகளில் வேதியர்கள் ஓதுகின்ற
தெய்வச் சபைகளிலே
சாதியென்று ஓதிடுவார்
சங்கடங்கள் செய்திடுவார்
நாடு முழுதும் நல்லாய்
பகுத்திறவு பிறந்திட்டால் - இவ்
சாதிக் கொடுமையெல்லாம்
பஞ்சாய்ப் பறந்து போகும்
(1968)

- நெல்லை க. பேரன்

சிவ.ஆரூரன்

# நெல்லை க.பேரனின் மனச் சான்று “சத்தியங்கள்” சிறுகதைத்தொகுப்பு




நெல்லை க.பேரனை எப்போது நான் அறிந்து கொண்டேன் என இப்போது நினைத்துப் பார்க்கிறேன். கலாசார கூட்டுறவுப் பெருமன்றம், கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வடமராட்சி வாழ் இலக்கியவாதிகள் பலரின் சிறுகதைகளை ஒரு தொகுப்பு நூலாக “உயிர்ப்புகள்” என்ற பெயரில் வெளியிட்டிருந்தது (1986). அந்நூல் 1988இல் எமது வீட்டிற்கு வந்து சேர்ந்த போது முகப்பு அட்டையிலுள்ள சிறுகதை ஆசிரியர்களின் படங்களைப் பார்த்தேன். அம்மா சத்தமாக கதைகளைப் படித்துக் காட்டினார். ஆயினும் கதைகளின் பொருளை முற்றாகக் கிரகிக்க என்னால் இயலவில்லை. அப்போது நான் ஆண்டு நான்கு மாணவன். அம்மா சிறுகதை ஆசிரியர் பலரை அறிமுகம் செய்தார். அவர்களில் நெல்லை க.பேரனும் ஒருவர். எழுபது காலப் பகுதியில் எமது மாமா க.பூரணமூர்த்தி அவர்கள் கொழும்பு, ஆட்பதிவுத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகப் பணியாற்றிய வேளை பாமன்கடேயில் அவரின் அறைத் தோழராக நெல்லை க.பேரன் இருந்தார் என்பதையும் அறிந்து கொண்டேன்.

1991, நான் ஆண்டு ஏழு மாணவன். ஹாட்லி கல்லூரியில் தாமோதரம்பிள்ளை கட்டட மேல் மாடியில் எமது வகுப்பறை இருந்தது. காலையில் பள்ளிக்கு வந்த வகுப்புத்தோழன் சுவர்ணதீபன், “இரவு பலாலியில இருந்து அடிச்ச செல்லில வீட்டுச் சுவர் விழுந்து நெல்லை க.பேரன் குடும்பத்தோட செத்திட்டார்” என்றான். தம்பி பரணீதரன் நெல்லை க.பேரனின் “சத்தியங்கள்” சிறுகதைத் தொகுப்பை என் கையில் தந்து கருத்துரை எழுதும்படி கூறியவேளை மேற்படி சம்பவங்கள் யாவும் மனதில் உடனடியாகவே தோன்றியது. ஜீவநதி வெளியிடவிருக்கும் நெல்லை க.பேரனின் சிறப்பிதழுக்கு கட்டுரை எழுதும்வாய்ப்பளித்த பரணிக்கு நன்றி!

நெல்லை க.பேரனின் “சத்தியங்கள்” என்ற சிறுகதைத் தொகுப்பு (1987 ஜனவரி) ஷர்மிளா பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. 1968 முதல் 1987 வரையில் ஆசிரியரால் எழுதப்பட்ட பதினேழு சிறுகதைகள் அதில் காணப்படுகின்றன. அந்தந்தக் காலச் சூழலில் காணப்பட்ட எரியும் சிக்கல்களைத் தன்னுடைய கதைகள் மூலம் தெரியப்படுத்துகிறார். வர்க்கம், சாதி, வன்னியில் நிறுவப்பட்ட படித்த வாலிபர் திட்டம், தேசியப் போராட்டம், சவூதி, குவைத் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு இளைஞர்கள் வேலைத் தேடிப் போனவை என அனைத்து விடயங்களையும் எடுத்தாண்டுள்ளார்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப்பட்ட கதைகளுக்கு இன்றைய வளர்ச்சியடைந்த சிறுகதை வடிவத்தோட பொருத்திப் பார்த்துக் கருத்துரைப்பது தகாதது. ஏதாவது ஒரு சம்பவத்தை சித்திரிப்பு முறையினூடாகவே அதை ஒரு சிறந்த சிறுகதையாக்க முடியும். சித்திரிப்பு முறையில் கவனம் செலுத்தாது விடின் அது ஒரு சம்பவப் பதிவு எனும் நிலையில் தன்னைக் குறுக்கிக் கொண்டுவிடும். “ஒரு நாணயம் காப்பாற்றப்படுகின்றது” (1986), “பெருமூச்சு” (1981), “அன்புள்ள எழுத்தாளருக்கு” (1984), “சினிமாவுக்குப் போகிறார்கள்” (1969), “ஏணிப்படிகள்” (1984) ஆகிய நீதிக்கதைகள் என்ற போக்கில் எழுதப்பட்டுள்ளன.

“ஒரு பென்சன்காரர் பயணம் போகிறார்”(1985), “ஒரு ஞாயிற்றுக்கிழமை நாற்பது நிமிடம்” (1976), “கவிதை அரங்கேறும் நேரம்”(1986) என்பன சம்பவக் கோர்வையாக அமைந்துள்ளன. நகைச் சுவையாக பதிவு செய்யப்பட்டுள்ளமையால் படிப்பதற்கு ஆர்வமாக உள்ளது. அக்காலச் சூழல்களில் சமூக நடத்தைகளையும், வாழ்க்கை முறைகளையும் அறியக்கூடியதாக எழுதப்பட்டள்ளமை சிறப்பு.

ஆசிரியர் சமூகத்திற்கு நன்மை ஏற்பட வேண்டி யதார்த்த முரணான கதைகள் சிலவற்றையும் எழுதியுள்ளார். “மனப்போக்கு” (1968) கோழி மேய்த்தாலும் கொர்ணமேந்தில மேய்க்கோணும் என்பதை எள்ளல் செய்யும் விதமாக எழுதப்பட்டுள்ளது. விவசாயி மகனான இரத்தினம் விவசாயம் செய்து வசதியாக இருக்கிறான். பின் அரச உத்தியோகம் பார்க்க கொழும்பு செல்கிறான். அரசவேலை வருவாயினுள் அவனது செலவு அடங்கவில்லை. வீட்டிலிருந்து 20/= அனுப்ப வேண்டியுள்ளது என எழுதப்பட்டுள்ளது. மேற்படி விடயத்தை தவிர்த்து விட்டிருக்கலாம். இதைப்போலவே, “ஒரு புது அத்தியாயம் ஆரம்பமாகிறது” (1976) வன்னியில் விவசாயம் செய்து முன்னேறலாம் என்ற நம்பிக்கையில் ஓரிளைஞன் வெளிநாடு செல்லும் எண்ணத்தைக் கைவிட்டு தன்

கடவுச் சீட்டைக் கிழிப்பதற்கான உரிய சூழல் கதையில் நிறுவப்படவில்லை.

மெல்ல இனிச் சாகும் (1986) என்ற கதையில் சின்னத்துரை சவூதியில் கப்பல் கம்பனியில் பணிபுரி கிறான். ஊரில் அவனது சாதியால் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேந்த இளைஞர் இருவர் அங்கு பணிபுரி கின்றனர். ஒருவன் அவனோடு தங்கியிருப்பவன். சின்னத் துரைக்கு மேலே உள்ள கட்டிலில் அவன் படுத்திருப் பதை சின்னத்துரையால் ஏற்க முடியாதுள்ளது. மற்ற இளைஞன் பொறியியலாளனாக இருக்கிறான். அவன் ஏவும் பணிகளைச் செய்ய மனம் இடங்கொடுக்காமல் சின்னத்துரை வருந்துகிறான். திரும்பி வீட்டுக்கு வரவும் முடியாது. செலுத்தப்பட்ட 28ஆயிரம் ரூபாய்களும் வீணாகி விடும். அதற்கு மேல் சிங்கள இளைஞர்களும் சின்னத்துரையை இன ரீதியில் கேலி பண்ணுகிறார்கள். இடையில் சின்னத்துரையின் பேரன் ஊரில் எறிகணை வீச்சில் இறக்கிறார். சின்னத்துரை தன்னை மாற்றிக் கொள்ள முயற்சிக்கிறான். மேற்படி கதையில் மையக்கரு சிதைந்துள்ளது. சாதியம், இன ஒடுக்கல் என்பவற்றை ஒன்றாக எழுதியதோடு எறிகணை வீச்சில் சின்னத் துரையின் பேரன் கொல்லப்படுவதை ஆண்டவனின் தீர்ப்புபோல் உணர்த்துவது தகாதது.

“பிள்ளைகள்“ (1987 ஜனவரி) தொகுப்பில் இது இறுதிக்கதை; இறுதியாக அவரால் எழுதப்பட்டு தொகுப்பில் சேர்க்கப்பட்டதும் இது தான். காலையில் கேட்ட வேட்டொலியால் குழந்தை ஒன்று அழுவதை யும், அது ரைக்ரர் சத்தம் எனக்கூறி குழந்தையை ஏமாற்றுவதும் கதை எதிர்காலத்தை ஆசிரியர் கணித்த விதம் அற்புதமாக உள்ளது.

“கடற்கரைப் பக்கமாக ஒரே சத்தங்கள்.
குழந்தை மிகவும் பயந்துபோய் இருக்கிறாள்.
இந்தப் பயம் எதிர்காலத்தில் என்ன பாதிப்பை
ஏற்படுத்துமோ?
என் நெஞ்சு கனக்கிறது;
நெஞ்சு கனத்தாலும் அடிமனதில் விடிவுக்கான
ஒரு நம்பிக்கை ஒளி தெரிகிறது”

என முடிகிறது கதை.

மேற்படி கதையை விடுத்து முக்கியமான மூன்று கதைகள் தொகுப்பில் உள்ளன.

1. ஒரு விதமான கதை (1971)

வீதியோரம் மரநிழலில் கந்தல் ஆடை யோடு படுத்திருக்கும் ஒரு பெண்ணைக் கண்டு விட்டு கதைசொல்லி அப்பெண்ணின் வாழ்க்கையை மையப்படுத்தி எவ்வாறு ஒரு சிறுகதையை உருவாக்க லாம் என எண்ணமிடுவதே இச் சிறுகதை. வர்க்கம், அரசியல், பிரசாரம், கலையம்சம் என அக்காலத்தில் பொது வெளியில் நிகழ்த்தப்பட்ட உரையாடல்கள் மீதான தனது விமர்சனத்தை காய்தல் உவத்தல் இன்றி வெளிப்படுத்தியுள்ளார். நன்றாக உள்ளது. ஒரு நாவலாசிரியரது தகுதிகள் அனைத்தும் அவரிடம் இருந்தன என்பதற்கான சான்றுக் கதை இது.

2. வாடகைக்கு வீடு (1970)

கொழும்பில் சொந்த வீடுவைத்திருக்கும் அருளம்பலம் தனது வீட்டின் பாதியை பியரத்னா என்பவனுக்கு இருபது ரூபாய் வாடகைக்குக் கொடுக் கிறார். இருபது வருடமாக அதே வாடகை தான்; அருளம்பலத்தால் வாடகையை உயர்த்தவும் முடிய வில்லை. பியரத்னாவை குடியெழுப்பவும் முடிய வில்லை. இடையில் பியரத்னா அடாவடி செய் கிறான்; பைலா ஆடி பிறந்தநாள் கொண்டாடுகிறான். பொலிசுக்கு அருளம்பலம் முறைப்பாடு செய்ததும் பொலிஸ் வந்து பியரத்னாவை அச்சுறுத்தி விட்டுச் செல்கிறது. அன்றிரவு அருளம்பலத்தின் வீட்டின் மேல் கற்கள் வீசப்படுகின்றன. பியரத்னாவை குடி யெழுப்ப அருளம்பலம் நீதிமன்றத்தை நாடுகின்றார். வழக்கை விளங்கிய நீதிபதி மொத்த வீட்டிற்குமான வாடகை முப்பது ரூபாய் என்பது சட்டப்பிரகாரம் வருகிறது என்ப தால் பியரத்னா பதினைந்து ரூபாய் கொடுத்தால் போதும் என தெனாலி இராமன் பாணியில் தீர்ப்பளிக்கிறார்.

“அருளம்பலத்தார் இப்போது பதினைந்து ரூபாய் வாடகை வாங்கிக் கொண்டு பேசாமல் இருக் கிறார். பியரத்னாவும் பிறந்தநாள்விழாக்களைக் கொண்டாடிக்கொண்டிருக்கிறான்” என கதை முடி கிறது. ஆசிரியர் அறத்துடனும் நடுவுநிலைமை யுடனும் கதை எழுதியுள்ளார். சொத்தைக் குவிக்கும் மனிதரையும் இனவாதத்தை சாதகமாக பயன் படுத்தும் மனிதரையும் அறத்தின்வழி விமர்சிக்கிறார். சிறப்பான பார்வை.

3. ஒரு தொழிலாளி சைக்கிள் வாங்குகிறான் (1975)

இராயப்பு என்ற நகரசுத்தித் தொழிலாளி ஓர் அரச ஊழியராக இருப்பினும் அவர் மதிப்பளிக்கப் படுவதில்லை. உரிய சம்பளமும் வழங்கப்படுவதில்லை. குறித்த சாதியினரை மேற்குறித்த தொழிலுக்கு அமர்த்தப் பட்டு அரசினாலேயே சுரண்டப்படும் கொடூரம் கதை யின் போக்கில் உணர்த்தப்படுகின்றது. ஐம்பத் தைந்து வயதுவரை ஓய்வின்றி உழைத்த இராயப்புவால் ஒரு சைக்கிளைக் கூடசொந்தமாக வாங்க முடியவில்லை என்பது எத்தனை கொடியது. சைக்கிள் ஒன்று வாங்கு வதற்காக அவர் “லோண்” வாங்குகிறார் சிறந்த கதை. ஒருவகையில் சாதியக் கதையும் தான்.

நெல்லை க.பேரன் அனைத்து விதமான ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகக் குரல் எழுப்பியுள்ளார். அவரின் எழுத்தில் ஓர் அறம் காணப்படுகின்றது. இவ்விடத்தில் கால்மாக்ஸ் இன் மேற்கோள் ஒன்று என் நினைவிற்கு வருகின்றது. “கவிஞர் பைரனுக்கும் ஷெல்லிக்கும் இடையிலான வேறுபாடு இது தான். 36 வயதில் பைரன் இறந்தது நல்லது. அவன் மேலும் வாழ்ந்திருந்தால் பிற்போக்கான முதலாளி வாதியாக மாறியிருப்பான். மாறாக 29 வயதில் ஷெல்லி இறந்தது வருந்தத்தக்கது. ஏனெனில் அவன் தன் வாழ்நாள் பூராகவும் புரட்சி யாளனாகவே இருந்தான். மேலும் வாழ்ந்திருந்தால் சோசலிசத்தின் முன்னோடியாக விளங்கியிருப்பான்.”

- மாக்ஸ் அடிக்கடி கூறுவார் என்று அவரின் மகள் எலியனார் மாக்ஸ் கூறியது-

அவ்வகையில் நெல்லை க.பேரன் அவர்களும் நீண்ட நாள் வாழ்ந்திருப்பின் அரிய பல படைப்புகளை அறத்தின் வழி நின்று தமிழ் இலக்கியத்திற்கு வழங்கியிருப்பார். ஏனெனில் அவரது படைப்புகளில் சமூகம் தொடர்பான கரிசனை மிகுந்துள்ளது. எப்போதும் ஒடுக்குமுறைக்கு எதிராக பேசும் இயல்பு காணப்படுகின்றது. அவரின் இழப்பு தமிழ் இலக்கியத்திற்கும் பாரிய இழப்பு எனத் துணிந்து கூறலாம் என்பதற்குச் “சத்தியங்கள்“ என்ற சிறுகதைத்தொகுப்பு சான்று பகர்கிறது.

அந்த இரவு எப்படி மறந்து போகும்!

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக வீட்டில்...

வீதியில்... இலக்கியக் கூட்டங்களில்... பொது வைபவங்களில் சந்தித்துப் பேசி நட்புரிமை பூண்டு, கலந்துறவாடிக் களித்திருந்த வாழ்வின் அந்தமாக வந்து முடிந்துபோன அந்த இரவு.

டொக்டர் முருகானந்தன் அவர்கள் இல்லத்தில் "அறிவோர் கூடல்" சந்திப்பின்போது வழமைக்கு மாறாகச் சற்றுத் தாமதமாகி ஓடோடிவந்து, கலந்துரையாடலில் அக்கறையுடன் பங்கு கொண்டு, இயல்பான கலகலப்புடன் நகைச்சுவை முத்துக்களைச் சிந்தி, நிகழ்வின் முடிவில் நன்றியுரை ஆற்றிப்போன அந்த இரவு!

அன்றைய கூடல் கருத்துரைஞனாக இருந்தவன் என்ற நியாயத்தின் பெயரில் விசேஷநன்றி எனக்குத் தெரிவித்து, அங்கிருந்து புறப்பட்டுச் செல்லும்வேளை நேரில் வந்து சொல்லி, இறுதியாக விடைபெற்றுச் சென்றுவிட்ட அந்த இரவு!

இதயங்கள் துன்ப இருளில் மூழ்கிப் போன மறுநாட்காலை, மயானத்தில் மனைவி மக்களுடன் அடுக்கிய சிதையின் மீது வரிசையாக மீளாத் துயில் கொண்டு, முதல்நாள் இரவின் சொல்லுக்கும் செயலுக்கும் புதிய அர்த்தங்கள் பலவாக மனங்களிலே தோன்றுவிக்கக் காரணமாக அமைந்துவிட்ட அந்த இரவு!

அந்த இரவின் அசாதாரண சந்திப்பு, அதனைத் தொடர்ந்து சிலமணி நேரத்தில் "ஷெல்" உருவிற் சீறி வந்து ஆவி பறித்துச் சென்ற குரூர நிகழ்வு, இவைகளினால் உள்ளம் மாய்த்து சுடுகாட்டுச் சாம்பலில் சுற்றி நின்று சுதறிக் கண்ணீர் சிந்தத்தான் எங்களால் முடிந்தது.

மரணங்களுக்காக நாங்கள் அழவில்லை
ஜனனத்துள் மரணம்
அடக்கமாகிச் ஜனிக்கின்றது
ஜனித்தது மரணிக்கும்
ஆனால் ஜனித்தது மரணிக்கப்படக் கூடாது.

எங்கள் அருமை நண்பன் பேரன் மரணிக்கப் பட்டான். அவன் மனைவி, மக்கள் மரணிக்கப் பட்டார்கள். இது கொடுமை! இந்தக் கொடுமையினை எண்ணியெண்ணி எங்கள் இதயங்கள் கண்ணீர் வடிப்பதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது முதன் நாட்சந்தித்திருந்த அந்த இரவு அந்தச் சந்திப்பு இலக்கிய நெஞ்சங்களின் சந்திப்பு, எனவே நண்பர் பேரனின் இலக்கியங்கள் பற்றி இந்த தருணம் கவனத்திற் கொள்வது அவசியமாகின்றது.

# விமானம் மீண்டும் வருமா?

## தெணியான்



நண்பன் பேரன் எழுத்தாளனாக எழுத ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. இந்த ஆண்டு (1991) அவரது வெள்ளி விழா ஆண்டு கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமக்கேயுரிய செயல் வேகத்துடன் பேரன் எழுதி வந்திருக்கின்றான். அந்த வேகமானது அவரது எழுத்தில் வெகு மூர்க்கமாக ஒரு காலகட்டத்தில் வெளிப்படலாயிற்று. எழுபதுகளிலும் எண்பதின் ஆரம்பத்திலும் நண்பர் பேரன் ஓயாது எழுதிக்குவித்தார். ஈழத்துத் தினசரிகளின் வார வெளியீடுகள், மாதசஞ்சிகைகள் என்பவைகளில் எல்லாம் பேரனின் சிறுகதைகள் தொடர்ந்து வெளிவந்தன. குறித்த ஒரு தினத்தில் இரண்டு அல்லது மூன்று வார வெளியீடுகளில் பேரனின் படைப்புகள் வெளிவந்ததும் உண்டு. தமிழகத்துத் தாமரையிலும் அக்காலத்திற் சிறுகதைகள், இலக்கிய மடல்களை எழுதிவந்தார். பேரனின் எழுத்துக்கள் தொகையில் ஒரு சாதனையாகவும், தமிழ் இலக்கியப் பரப்பிலே தமது பெயரை நிறுவுவதற்கான ஒரு எத்தனமாகவும் அந்த முயற்சிகள் அமைந்தன.

நண்பர் பேரன் நிறைய எழுதினார். அதேசமயம் சமுதாயம் பற்றிய மிகுந்த அக்கறையுடன் தான் தமது படைப்புக்களை உருவாக்கினார். சாதாரண வாசகர்களின் பாமர ருசிகளுக்குத் தீனி போடும் ஜனரஞ்சகமான எழுத்துக்கள் போலல்லாது. சமுதாய மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்ட இலக்கியங்களைப் பேரன் படைத்தார். அவரது படைப்புக்களைச் சாதாரண மக்கள் விரும்பிப் படித்தார்கள். யாருக்காகப் பேரன் எழுதினாரோ அவர்களிடம் - வெகுஜெனங்களிடம் அவரது படைப்புகள் சென்றடைந்தன.

இந்த இடத்தில் பேரனின் படைப்புக்களின் அடிநிலை நின்று சில வினாக்களை எழுப்புவது மிக நியாயமென்றே தோன்றுகிறது. ஜனரஞ்சக எழுத்தாளனாகத் தம்மைத் தாழ்த்திக் கொள்ளாது சமுதாய அக்கறையுடன் நிறையவே எழுதி வந்திருக்கும் நண்பர் பேரனால் வெகுஜனங்கள் விரும்பிப் படிக்கத் தகுந்த வண்ணம் தமது படைப்புக்களை எவ்வாறு சிருஷ்டிக்க முடிந்தது? அல்லது சாதாரண பொதுமக்களும் விருப்புடன் ஏற்றுப்படிக்கத் தகுந்த அம்சம் எது? இலக்கியம் சாதாரண மக்களை சென்றடைய வேண்டுமானால் பேரனின் இலக்கியச் செயற்பாடுகளுக்கூடாக ஏனைய எழுத்தாளர்கள் சுவனத்திற் கொள்ள வேண்டியவை எவை? இந்த வினாக்களுக்கான விடைகள் விமர்சகர்களால் கண்டடையப்படும் போதுதான் நண்பர் பேரனின் இலக்கியத்துறை சார்ந்த சாதனைகள் முழுமையாக விளங்கிக் கொள்ளப்படும்.

நண்பர் பேரனின் சாதனைகளை எண்ணும் போது, அந்தச் சாதனைகளுக்குப் பின்னால் மறைந்திருக்கும் அவர் மனைவியை மறந்துவிடுதல் இயலாது பேரனின் இலக்கிய சமூக பணிகளுக்கெல்லாம் உறுதுணையாகவும் உந்துசக்தியாகவும் விளங்கியவர் உமா பேரம்பலம் தனது கணவனின் நண்பர்களை உடன் பிறந்த சகோதரர்கள் போலக் கருதி வரவேற்று உபசரிக்கும் இனிய பண்புடையவர். அவர்களைப் போலவே அவர்களது குழந்தைகளும் வாழ்ந்தார்கள். இந்தப் பண்புகள் யாவும் நண்பர் பேரனுக்கு இயல்பான இனிய பண்புகள்.

ஓ... எனது அருமை நண்பனே.

அன்பினால் எல்லோரையும் இணைத்து தழுவிக் கொண்டு செல்லும் இயல்புடையவன் நீ அன்றோ! அந்த இயல்பினை உன் மரணத்திலுமா நீ தவறாது பின்பற்றினாய்! மனைவி மக்களைப் பிரியாது உன்னோடு அணைத்து தழுவிக் கொண்டு சென்று விட்டாய்! நண்பா, “விமானங்கள் மீண்டும் வரும்” என எழுதிச் சென்ற நீ, உன் மனைவி மக்களுடன் சடுதியாகப் பறந்து சென்றுவிட்ட அந்த “விமானம் மீண்டும் வருமா“ என்று ஏங்குகின்றதே இன்று எனது நெஞ்சம்!

“மலரவன் செய்வெற்றுடம்பு மாய்வன போல்
மாயா, புகழ்கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு”


## பேரனும் அவரது படைப்புகளும்

**கி. நடராசா**

சாதாரண ஒரு விவசாயிகளின் மகனாகப் பிறந்து தன் கடின முயற்சியினாலும் உழைப்பினாலும் உயர்ந்தவர் நெல்லை க.பேரன் அவர்கள். தனது எழுத்தாக்கத்தின் மூலம் ஈழத்தின் மூலை முடுக்குகள் எல்லாம் தனது புகழைப் பரப்பியிருந்தார். அவரது எழுத்துகளில் தமிழ்ச் சமுதாயத்தின் சமகால நிகழ்வுகளே உணவாகவும், குடிநீராகவும் அமைந்திருந்தன. மக்கள் நோக்கிலிருந்தே அவரது எழுத்துக்கள் தோன்றின வாசகரை மையமாகக்கொண்டு தோன்றியதில்லை. உள்ளத்திலே ஒரு தூண்டுதல் இயக்க அதுவே அவரது படைப்பாக மாறுகின்றது. வாசகனை மனதில் வைத்துக் கொண்டு எழுதுகிற எந்த எழுத்துக்கும் காலத்தை மீறி நிற்கும் சக்தியில்லை என்பது பேரனின் இலக்கிய அனுபவமாகும். அவர் ஒரு யதார்த்தவாதி ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் உள்ள சமூக சக்திகளை வேறுபடுத்திக் காட்டுவதில் மிகுந்த சாமர்த்தியசாலி.

இலக்கியம் என்பது வாழ்க்கையின் ஒரு பகுதி வாழ்க்கைகும் அதற்குமுள்ள பொருத்தத்தைக் கொண்டுதான் இலக்கியத்தை எடைபோட வேண்டும். வாழ்க்கை பற்றிய உணர்வை அளிக்காத புனைகதைகள் ஒரு தடவை படிக்கத் தகுந்தவை. ஆனால் மறுபதிப்பிற்கு பொருத்தமற்றவை. இவ்வகையில் பேரனது படைப்புக்கள் இதற்கு விதிவிலக்கானவை என்பதே அவரது எழுத்தாக்கம் பற்றிய எனது மதிப்பீடு.

முருகபூபதி



# எறிகணை வீச்சுக்குப்பலியான எழுத்தாளன் நெல்லை க.பேரன்

**மனைவி பிள்ளைகளுடன் எறிகணை வீச்சுக்குப்பலியான எழுத்தாளன் நெல்லை க.பேரன்**
**துளிர்க்கத்துடித்த ஒரு மனிதனின் ஓலம்**

*சங்கத் தமிழாலே தாலட்டுப்பாடி எந்தன்*
*தங்கக் குழந்தையை நான் நித்திரையாக்கிவிட்டால்*
*திடீரென்று கேட்கும் வெடிச்சத்தம் எங்கோ*
*அர்த்த ராத்திரியில் ஆசையாய் மணம் முடித்த*
*அன்பு மனையாளைக் கட்டியணைத்து*
*ஒரு முத்தம் தரவென்று*
*சிந்தையில் நினைத்திட்டால் கேட்கும் ஒரு குண்டுச்சத்தம்*
*நெஞ்சு கலங்கி என் வேட்கையும் கலைந்து மிக்க*
*வேதனையோடு நான் முகத்தைத் திருப்பிடுவேன்*
*குண்டுகள் வந்து கூரையைத் துளைத்தாலும் என்று*
*கட்டிலின் அடியினிலே பிள்ளையை பெண்டிலை நான்*
*தள்ளியே சாக்கால் மூடிப் பதுங்கியே பதகளிப்பேன்*
*கறுப்புக் கழுகுகள் ஆகாயத்தில் வட்டமிட்டால்*
*ஐயோ வென்று அலறும் இதயம்*
*எப்பெப்ப என்னென்ன எங்கேயோ என்றெல்லாம்*
*எண்ணி ஏங்கித் தீய்ந்து கருகி*
*உருகி வாடும் பாழும் இதயம்*
*துளிர்க்கத் துடிக்கும் ஆனால் நாட்டிலோ*
*ஈரலிப்பு இல்லையே*

1987 ஆம் ஆண்டு எங்கள் பேரன் எமக்களித்த கவிதை இது. நான்கு ஆண்டுகளில் அதாவது 15.7.1991 ஆம் திகதி நள்ளிரவில் பேரன் இந்தக் கவிதையை நினைத்திருப்பாரா? தனது அன்பு மனையாள் உமாதேவியையும் செல்வமகன் உமாசங்கர் மற்றும் செல்வமகள் சர்மிளாவையும் சாக்கால் மூடி கட்டிலின் அடியிலே தள்ளிக் காப்பாற்ற முனைந்திருப்பாரா?

எவருமே அறிந்திருக்க மாட்டார்கள்.

படையினரின் ஆட்லறி எறிகணைத் தாக்குதலின்போது தனது மனைவி மக்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு போய்விட்டார் எங்கள் நெல்லை க. பேரன். இரத்தத்தை உறையவைத்து நெஞ்சமதை அடைக்க வைத்து வெடித்துச் சிதறிய விம்மல்கள் எத்தனை எத்தனை?

செய்தி கேட்டு கலங்கிப் போனேன்.

ஆறுதல் தெரிவித்து கடிதம் எழுதவும் மனைவி மக்களை விட்டுச் செல்லாமல் உடன் அழைத்துச் சென்று விட்டார் எங்கள் நெல்லை க. பேரன்.

அப்பொழுது எம்மையெல்லாம் உலுக்கிய சம்பவம் அந்த முழுக்குடும்பத்தின் அகால மறைவு.

பேரம்பலம் என்ற இயற்பெயர் கொண்டவர். வடமராட்சியில் நெல்லியடியில் 1946 இல் பிறந்தார். தனது எழுத்துலகில் ஊரின் பெயரையும் இணைத்துக்கொண்டு நெல்லை. க. பேரன் ஆனார். 1991 இல் தமது 44 வயது அற்பாயுளில் எங்களை யெல்லாம் விட்டு மறைந்தார்.

பேரன் பத்திரிகை நிருபராக எழுத்துப் பணியை ஆரம்பித்து ஆக்க இலக்கியகாரனாக பரிமளித்தவர். தபால் திணைக்களத்திலும் பின்பு சிறிது காலம் குவைத்திலும் பணி யாற்றியவர். எழுத்தாளர்களுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இடையே நூலிழை வித்தியாசம்தான். இரண்டு தரப்பாருக்குமே பொறுப்புணர்வும் தார்மீகக் கடமைகளும் இருக்க வேண்டும். இலங்கைத் தமிழ் எழுத் தாளர்கள் பத்திரிகையாளர்களைப் பொறுத்தவரையில் பணத்துக்காக பேனை பிடிப்பவர்கள் அபூர்வம். இலக்கியத்துறையில் எழுத்தையே முழு வாழ்க்கைக்குமான தொழிலாகக் கொண்டவர்கள் கூட இங்கு பெரு மளவில் சம்பாதித்தவர்கள் அல்லர். எழுதியவை வெளிவந்தாலே போதும் என்றளவில் ஆறுதல் அடைந்தவர் களே அநேகம்.

பேரனும் எழுதினார். செய்தி கள் கட்டுரைகள் சிறுகதைகள் நாவல் கவிதை அறிக்கைகள் பேட்டிகள் இப்படியாக பலதும் எழுதிக் குவித்த வர் பேரன். பேரனின் எழுத்துக்களை குறிப்பாக கதைகளைக் கூர்ந்து படித் தால் அவை நடைச்சித்திரமாகவே காட்சியளிக்கும். செய்திகளும் அறிக்கைகளும் எழுதிப் பழகியத னாலோ என்னவோ அவரது சிறுகதை களும் சில சமயங்களில் அவ்வாறு அமைவதுண்டு. இது பத்திரிகை யாளர்களுக்கு ஆக்க இலக்கியம் படைக்கும்போது நேர்ந்துவிடும் அபாயம்தான். பேரனும் இந்த அபாயத்தில் சிக்குண்டார்.

எனினும் பேரனின் இலக்கிய

வரவுகள் :- ஒரு பட்டதாரி நெசவுக்குப்போகிறாள் சத்தியங்கள் (சிறுகதைகள்) விமானங்கள் மீண்டும்வரும் வளைவு களும் நேர்கோடுகளும் (குறுநாவல்கள்) பேரனின் கவிதைகள் சந்திப்பு நேர்காணல் தொகுப்பு.

இவர் அங்கம் வகித்த கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகத்தின் மாதாந்த சந்திப்புகளில் இவரது எழுத்துக்கள் விமர்சிக்கப்பட்டன. அச் சந்திப்புக் களை தனது வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொண்டவர் பேரன்.

பழகுவதற்கு இனியவரான பேரன் கூட்டங் களுக்கு வந்தால் கூட்டத்தின் செய்திகள் நிச்சயம் ஏதாவது ஒரு இதழிலோ பத்திரிகையிலோ வெளியாகும் என திடமாக நாம் நம்பலாம்.

மனிதர்களுடன் பழகுதல் இனிய பண்பு. இந்தப் பண்பை இவரிடமும் நான் கற்றேன். இந்தப் பண்பை எல்லோரிடமும் (படைப்பாளிகளிடம்) காண்பது அரிது. 1972 ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டு வரையில் இடையில் அவர் சில காலம் மத்திய கிழக்கில் பணிபுரிந்த காலம் தவிர்ந்து அவருடன் பழகிய சந்தர்ப்பங்கள் பசுமையானவை.

மாஸ்கோவில் நடந்த சர்வதேச மாணவர் இளைஞர் விழாவுக்குச்சென்று திரும்பிய எனக்காக 1986 நவம்பரில் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர் நண்பர் ஸ்ரீதரசிங் நண்பர் டொமினிக் ஜீவாவுடன் இணைந்து மூத்த எழுத்தாளர் வரதர் தலைமையில் யாழ்ப் பாணத்தில் தேநீர் விருந்தொன்றை ஏற்பாடுசெய்தார். அதில் கலந்து கொண்டு என்னை வாழ்த்திப் பாராட்டிய பேரனை அச்சந்திப்பின் பின்பு நான் சந்திக்கசந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதுவே இறுதிச் சந்திப்பு.

எழுத்தாளர்கள் எழுதவேண்டும். எழுதாதவர் கள் எழுத்தாளர்கள் அல்ல. இறைக்க இறைக்கத்தான் தண்ணீர் ஊற்றெடுக்கும். இறைக்காத கிணறு நாறும். அதுபோல்தான் எழுத்தும். தொடர்ந்து எழுதாமல் விட்டால் பின்பு எழுதுவதற்கு சோம்பலாக இருக்கும். எழுத்துக்கு சோம்பல்தான் முதல் எதிரி.

பேரன் அன்றையதினம் எனக்கு வழங்கிய புத்திமதிகள் இவை. படைப்பாளிகள் அனைவருக்கும் பொருந்தும் அறிவுரைகள்.

வடமராட்சியில் பிறந்த எழுத்தாளர்களின் சிறு கதைகள் கொண்ட தொகுதியொன்று உயிர்ப்பு என்ற பெயரில் வெளிவந்த சமயம் அங்கு பிறந்து வெளி இடங்களில் நீண்டகாலம் வாழ்ந்த சோமகாந்தனின் (ஈழத்துச் சோமு) சிறுகதை அதில் இடம்பெறாமல் விட்டமை குறையெனக் கூறப்பட்டபொழுது இந்தத் தவறுக்கு பேரன்தான் பொறுப்பு என சிலரால் பொறுப் பற்ற முறையில் குற்றம் சுமத்தப்பட்டது.

இத்தவறு தற்செயலானது என ஒப்புக்கொள்ள குற்றம் சுமத்தியவர்கள் தயங்கினார்கள். பேரன் இவ்வாறு திட்டமிட்டு சோமுவை புறக்கணித்திருக்க மாட்டார் என்றே இப்பொழுதும் என் மனம் சொல்கின்றது.

இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் சிவத்தம்பியாவது (இவரும் வடமராட்சி யைச் சேர்ந்தவர்) ஆரம்பத்தில் இதனைச் சுட்டிக் காட்டி யிருந்தால் சோமுவின் கதையும் சேர்த்துக் கொள்ளப் பட்டிருக்கலாம் என்று சிவத்தம்பியில் நான் பழியைப் போட்டேன்.

சிவத்தம்பிக்கும் சோமுவுக்குமிடையே நிழல் யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம் அது.

எனினும் அந்தத் தொகுதி குறிப்பிடத்தகுந்தது. பேராசிரியர் சிவத்தம்பியின் விமர்சனக் கோட்பாடுகள் திசைதிரும்புவதை சமிக்ஞையிட்ட முன்னுரை அது.

தனது பெயரில் தான் பிறந்த ஊரையும் இணைந்துக் கொண்டு இலக்கிய உலகில் தன்னை பதிவு செய்துகொண்ட பேரன் அந்த ஊரையும் அங்கு வாழ்ந்த மக்களையும் நேசித்த மாண்பு அவரின் பணிகளில் துலக்கமானது.

பருத்தித்துறையில் வழக்கமாக மாதாந்தம் நடக்கும் அறிவோர் கூடலில் இறுதியாக கலந்து கொண்ட பேரன் அன்றையதினம் கையொப்பம் இடும் கோவையில் தனது பெயரை பதிவு செய்யவில்லையாம். நிகழ்ச்சி முடிந்து மாலையில் அவர் அனைவரிடமும்



விடைபெற்றுச் சென்றார். அன்றையதினம் இரவு காலன் ஆட்லறியின் உருவத்தில் வந்து அவரது நெல்லியடி இல்லத்தை பதம் பார்த்தான்.

சொந்த மண்ணில் சொந்தங்களைக் கதறவைத்து எம்மையெல்லாம் கலங்க வைத்துப் பிரிந்த பேரனின் இழப்பு ஒரு புறத்தில் ஆழ்ந்த சோகமாயிருந்தாலும் மறுபுறத்தில் சிறிய மன ஆறுதல். ஏனென்றால் தனது உயிருக்குயிரான மனைவி மக்களுடன்தான் அவர் சென்றார். தனித்து அல்லவே.

எங்கள் தாயக மண்ணில் இன்றும் காணாமல் போனவர்கள் குறித்து பேசிக்கொண்டிருக்கின்றோம். ஆனால் எங்கள் நெல்லை க. பேரன் தன்னையும் தனது குடும்பத்தையும் எவரும் தேடவேண்டாம் ஒன்றாகவே நிரந்தரமாக போய்விட்டோம் என்ற செய்தியை தந்து விட்டார்.

இலங்கையில் நீடித்தபோர் இப்படியும் அதிர்வு தரும் செய்திகளை வரலாற்றில் பதிவுசெய்திருக்கிறது. எனவே இனியும் போர் வேண்டாம் என்பதுதான் எம்மை விட்டுப்பிரிந்தவர்கள் எம்மவர்களுக்கு அழுத்தமாக பதிவுசெய்யும் உண்மையாகும்.

# பேரன் இதயத்தால் பெரியவன்

கோகிலா மகேந்திரன்



அந்தச் செவ்வாய்க்கிழமை மிகச் சோம்பேறித் தனமாய்த் தான் விடிந்தது.

காலையில் பத்திரிகை கொண்டு வருகிற பையனின் தயங்கிய நிழல் தாழ்வாரத்தில் போய் விழுந்ததை நான் கலனிக்கத்தான் செய்தேன். ஆனால் கண்களைப் பிழியும் ஒரு செய்தியை அதில் காண நேரிடும் என்று நினைக்கவில்லை.

பத்திரிகையை வாங்கிய மகன் ஓரிரு நிமிடங் களுக்குள்,

"அம்மா, இதைப் பாத்தீங்களே, நெல்லை க.பேரனின் வீட்டிலை ஷெல் விழுந்திட்டுதாம்..." என்று,

கனியாத நாவல்பழம் தின்றவன் போல் தொண்டை அடைக்கக் கூறினான்.

பத்திரிகையை வாங்கிப் பார்த்தேன். அந்தச் செய்தியை என்னால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை!

மனிதனைப் போலத்தான் சில சமயங்களில், இறைவனுக்கும் நெஞ்சிறுக்கம் ஏற்பட்டு விடுகிறதோ? இல்லாவிட்டால் இந்த நிகழ்வை எப்படி அவனால் OK பண்ண முடிந்தது. கண்ணீர்ப் பிசின் இதய அறைகளை இறுக்குகிறது எழுத்தாளர்களை இணைக்கும் ஒளி போல இருந்தவன், இரவில் இருளாகிப் போவது சாத்தியமா?

பேரனிடம் மொத்தமாக ஒரு குழந்தைமை நிறைந்து வழிந்தது என்றுதான் சொல்லவேண்டும். கொல்லையில் பூத்த முல்லை போல், மாநிறத்தில் எப்போதும் சிரித்த முகம். யாருக்கும் எந்த நேரத்திலும் உதவி செய்யத் தயங்காத உள்ளம். நண்பர்களை எல்லாம் வடை, பாயாசத்துடன் வரவேற்று உபசரிக்கும் பண்பு. எவருடைய மனமும் புண்படும்படி ஒரு சொல் சொல்லி அறியாத நா! மனித நேசிப்பு மேலோங்கி நிற்கும் எழுத்து. அவனுக்கு ஏன் இப்படி ஒரு முடிவு வர வேண்டும்? மனத்தடாகத்தில் பெரும் புயல் வீசிற்று.

காற்று வீச, முற்றத்து மாமரத்தின் இலைகள் சொரிந்தன அதுவும் தழையை உதிர்த்துத் தன் துக்கத்தை வெளிப்படுத்திக் கொள்கிறதோ?

ஒரு முறை ஆபிரகாம் லிங்கனைப் பற்றி, அவரது வளர்ப்புத் தாய் பின்வருமாறு சொன்னார்;

"Abe never gave me an unkind word or look and he never refused to do anything I asked him"

பேரனைப் பற்றிப் பேசுகிற போதெல்லாம் எழுத்தாள நண்பர்கள் இதே மாதிரித்தான் சொல்லிக் கொள்வார்கள் என்று நினைத்தபோது, வரண்ட காற்று மண்புழுதியையும், சருகுகளையும் வாரி இறைத்தபடி சுழன்று வந்து கொண்டிருந்தது.

மற்றவர்களைப் புண்படுத்தும்படி ஒரு சொல் சொல்லத் தெரியாதவர்கள், அநேகமாய்த் தாம் இலகுவில் புண்பட்டுப் போகிறவர்களாய் இருப்பார்கள். நெல்லை க.பேரன் அப்படியும் இருந்ததில்லை. அல்லது உள்ளே புண்பட்டுப் போனாலும் வெளியே காட்டிக் கொண்ட தில்லை என்பது இலகுவில் நம்பமுடியாத உண்மை.

எப்போதும் மன அமைதியுடன் இருப்பதற்கு வழி சொல்லும் உளவியல் நிபுணர்கள்,

"Never compare yourself or your achieve ments with others but make your comparisons only with yourself" என்று கூறுவார்கள். தன்னுடைய நடவடிக்கைகளை எப்போதும் தன்னுடனேயே ஒப்பிட்டுப் பார்த்து,

"நான் யாரைப் போலவும் எழுத விரும்பவில்லை. நெல்லை க.பேரனைப் போலவே எழுத விரும்புகிறேன்" என்று சொல்லி நிறைவுடன் வாழ்ந்த மனிதர் அவர்.

சமுதாயத்தில் புகழ்பெற்ற சில மனிதர்களின் செயல்களைப் பார்க்கும்போது, இவர்களைப் போல் ஏழேழு பிறப்பிலும் நாம் பிறக்கக் கூடாது" என்று தோன்றும். ஆனால் வேறு சிலரின் வாழ்வைப் பார்க்கும் போது, "பிறந்தால் இவரைப் போல் பிறக்க வேண்டும்" என்று ஓர் ஆசை தோன்றும். நெல்லை க.பேரனைப் போலப் பிறக்க வேண்டும் என்று நான் விரும்பியது உண்டு - அவரது இதயத்தின் விசாலத்தைப் பார்க்க நேர்ந்த சந்தர்ப்பங்களில்!

எல்லாச் செய்திகளையும் போலவே இந்தச் செய்தியும் நிறமிழந்து போய்விடலாம். இந்த எழுத்துக் கள் போனின் கல்லறை மீது நாம் தூவும் கடைசிப் பூக்களாயும் இருக்கலாம் ஆனால், அந்தகார இருளில் பேரன், அவரது அன்பு மனைவி, அருமைக் குழந்தைகள் ஆகியோரின் சிதைச் சுவாலைகளினூடே நாம் எதையோ தேடிக் கொண்டேயிருப்போம் அந்தத் தேடல் அவர் களுக்குச் சாந்தி தரும் என்ற நம்பிக்கையோடு!

# அந்த நாள் ஞாபகம்


அன்றொரு நாள்,
முழுநிலவை அனுபவித்த
கிராம வாழ்க்கை
நெல்லியடிச் சந்தியிலே
“செக்கன்ஷோ” பார்த்து விட்டு
சந்தியிலே ஹோட்டலிலே
பாங்கான ரீ குடித்துப்
பாட்டோடு நான் வீடு சென்ற அந்த நாட்கள்…
யாழ்ப்பாணம் சென்று நானும்
வேலையெல்லாம் முடித்துப் பின்
எம்.ஜி.ஆர். நடித்த “மன்னாதி மன்னன்” பார்த்து
மலாயா கபே தனிலே “டீ” ஒன்று அடித்துவிட்டுப்
பஸ்சில் ஏறிப் பின்னர் வீடு வந்து சேர்வேன்,
வீரசிங்கம் மண்டபத்தில்
பௌர்ணமி இரவிலன்று
திறந்தவெளிக் கலையரங்கில்
கலை நிகழ்ச்சி பார்த்த நாட்கள்
துரையப்பா விளையாட்டு அரங்கில்
துடுக்கான பந்தாட்டம்
கோட்டை முனியப்பரிலே
மூன்று கால பூசை என்றும்
முனைந்து நானும் சென்ற நாட்கள்…
அப்பா என்றழைக்கும் என் அன்புச் செல்வங்களுடன்
பருத்தித்துறைக் கடற்கரையில்
வள்ளங்கள் காட்டவென்று
சைக்கிளிலே நான் இருத்திக்
கரையோரம் உலா வருவேன்
வள்ளத்தில் வந்து சேரும்
வெள்ளம் போல் மீன் கூட்டம்
சுறா என்றும் பாரை என்றும்
திருக்கை சூடை என்றும்
கூடை கூடையாய்க் கொட்டிடுவார் சந்தையிலே
பருத்தித்துறை வடையோடு
மீனையும் வாங்கி நான்
பைசிக்கிள் தனிலே பக்குவமாய் ஏறி வந்த
அந்தநாட்கள் வந்திடாதோ?
ஒயிலாக டான்ஸ் ஆடும்
கொக்குவில் சின்னத்துரையின்
மயில் போன்ற நடைபயிலும்
சின்னமேளக் காரிகளும்
கரவெட்டிக் கார்த்திகேசுவின்
கலையாத சப்பறமும்
“மாத்தாயா“வின் லைட்மிஷினும்
வாண வேடிக்கைகளும்
கண்ணன், ரங்கன் என்று விதம்விதமாய்க் கோஷ்டிகளும்
திருவிழா உபயகாரர் ஆளடக்கி அகம் மகிழ
இரவிரவாய் விழித்திருந்து
நான் மகிழ்ந்த நாட்கள் இனித்
திரும்பியே வந்திட்டால்…
(1988)



நெல்லை க.பேரன்

இ.சு.முரளிதரன்

# நெல்லை க.பேரன் கவிதைகள்




எனது ஆசான் செ.யோகராசா அவர்களின் ஊடாக நெல்லை க.பேரனின் படைப்புகள் வாசிக்கக் கிடைத்தன. "விமானங்கள் மீண்டும் வரும்" என்னும் குறுநாவலை முகிழ்நிலைக் காலத்திலே வாசித்தேன். எனினும் அவரோடு உரையாடும் வாய்ப்பு அமையவில்லை. பேரன் மீது அதீத அன்புடையவராக செ.யோ அமைந்திருந்தார். இந்தப் பதிவினை எழுதும் வரை அவரது கவிதைகள் எவற்றையும் நான் படித்த தில்லை. நண்பர் க.பரணீதரனின் தூண்டுதலாலேயே பேரன் கவிதைகளை வாசித்து எழுத முற்பட்டேன். கவிதை எழுத ஆரம்பித்த காலத்தில் நானும் இத்தகைய கவிதைகளையே எழுதினேன் என்பதையும் வெளிப் படையாகப் பகிர்கின்றேன். ஆழமான தேடலும் வாசிப்பும் கிட்டிய பின்பே எனது கவிதையில் சிற் சில மாற்றங்கள் உண்டாயின. நெல்லை க.பேரனுக்குக் காலம் இடமளிக்காமையால் தொடர்ந்து கவிதை களைப் பட்டை தீட்டி ஒளிரச் செய்ய முடியவில்லை. கால்கோள்நிலைக் கவிதைகளோடு இவ்வுலகினை விட்டு அகன்று விட்டார். எறிகணைத் தாக்குதலில் அவரோடு குடும்பத்தினரும் அகாலமரணம் அடைந் தமை பேரதிர்ச்சிக்குரியது. தாங்கொணாத் துன்பியல் நிகழ்வாக அமைந்தது.



இருபத்தெட்டுக் கவிதைகளைக் கொண்ட "பேரன் கவிதைகள்" என்னும் நூலானது க.பரமானந்தம் நினைவு வெளியீடாக 1989 இல் வெளியாகியுள்ளது. முகிழ்நிலைக் கவிஞனுக்கான நெகிழ்வுகளோடும் கவியரங்குக்கவிதைகளுக்கான பண்புகளோடும் அமைந் துள்ளது. பொங்கலில் முந்திரி போல ஓரிரு கவிதைகள் சிறப்பாக அமைந்துள்ளன. நிறைவற்ற நூலாகவே காணப்படுகின்றது. நெல்லை க.பேரனுக்குள் நல்ல தொரு கவிஞனுக்கான முகிழ்ப்பு இருந்ததைப் பூரண மாகப் புறந்தள்ளி விடமுடியாது. மரணம் அரவணைக் காதிருப்பின் தீவிர வாசிப்பினூடாக வேறொரு பரி மாணத்தை அடைந்திருக்க வாய்ப்புண்டு என்பதையும் ஓரிரு கவிதைகளில் இனங்காண முடிகின்றது. கடலின் பண்பினைக் குறிப்பிடும் தருணத்திலே

"இரைவாய் நன்கு இரைவாய் - நல்ல
குரைநாய் போல இரைவாய்"

என்று வியக்க வைக்கின்றார். மாணிக்கவாசகரின் நாட்டாரியற் பதிவு நயத்தினைப்பின் பற்றிய கவி வரியும் சிறப்புற அமைந்துள்ளது.

"பெட்டியும் எஞ்சினும் ஆடவாட
ஆடவர் பெண்டிரும் ஆடவாட"

என பாணதுற கரையோரப் புகைவண்டி அனுபவத்தைப்பாடுகின்ற போது "முத்தணி கெங்கைகள் ஆட ஆட" என்னும் திருப்பொற் சுண்ண அடிகள் போலச் செய்தலில் புதுமையாக வெளிப்படுகின்றன. தமிழ், இயற்கை, பாரதி, தமிழ்ச்சமூகத்தின் செயற்பாடுகள், பொங்கல், வர்க்கமுரண், சாதியம் என சகலவற்றை முன்னிறுத்திக் கவிதை புனைந்துள்ளார். இன்றைய சூழலில் நோக்கும் போது மிகவும் மலினமான நூலாகவே தென்படுகின்றது. எடுத்துக்காட்டாக வெள்ளவத்தைக் கடற்கரையில் இருட்டி பிறகு நிற்கும் பெண்கள் குறித்த கவிதை சிறுபிள்ளைத்தனத்தோடு அமைகின்றது. இக்கவிதைக்கு முரணாக இன்னோர் கருத்தியலையும் வெளிப்படுத்துகின்றார். "ஓ...தமிழ்ப்பெண்ணே" என்ற

கவிதையில் “கற்பென்றும் காப்பென்றும் கண்டபடி பேசிடுவார் /கற்பென்றால் என்ன? பெண்களுக்கு மட்டுந்தானா?” எனக் குறிப்பிடுகின்றார்.

தொழிலாளர் குறித்துப்பேசும் போது சிறிது உணர்வு வெளிப்படுகின்றது. பொதுவுடைமைக் சுவிஞர் களின் சாயலில் அடிகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

“காடுகளை மேடுகளைக்கல்லு
முள்ளுப்பாதைகளை
வாட்டுகின்ற வெய்யிலிலே
ரத்தமாக வேர்வை சிந்தி
தேயிலையாய் றப்பர்களாய்
கொக்கோவாய் ஆக்கிவிட்ட
தோட்டத்தொழிலாளர்
வாழ்கவெள வாழ்த்திடுவோம்”

நெல்லை க.பேரனின் கவிதை நூலில் எனக்குப் பிடித்த வரிகளாக “பாரதி நீயிருந்தால்” என்ற கவிதையில் இடம் பெறும் பின்வரும் அடிகளைக் குறிப்பிடலாம்.

“கற்பனையோடுணர்ச்சியெனும் கலைக்குதிரை
தமிழ்தேரில் கட்டி நல்ல
சொற்பொருளால் கடிவாளம்
தொடர்புறவே பூட்டி”

இத் தொகுப்பு உள்ள கவிதையொன்று இதயத்தை நெருடும் வகையில் உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. “துடிக்கும் இதயம்” என்ற கவிதையே அவ்வகையில் அமைந்துள்ளது.

திடீரென்று கேட்கும் வெடிச்சத்தம் எங்கோ
அர்த்த ராத்திரியில் ஆசையாய் மணம் முடித்த
அன்பு மனையாளைக் கட்டியணைத்து
ஒரு முத்தம் தாவென்று
சிந்தையில் நினைத்திட்டால் கேட்கும்
ஓர் குண்டுச் சத்தம்
நெஞ்சு கலங்கி என்வேட்கையும் கலைந்துமிக்க
வேதனையோடு நான்
முகத்தைத் திருப்பிடுவேன்
வேதனையோடு நான்
முகத்தைத் திருப்பிடுவேன்
குண்டுகள் வந்து கூரையைத்
துளைத்தாலும் என்று
கட்டிலின் அடியினிலே
பிள்ளையைப் பெண்டிலை நான்
தள்ளியே சாக்கால் மூடிப்
பதுங்கியே பதகளிப்பேன்.

என்ற வரிகளை நோக்கும் போது அவலத்திற்கு உள்ளாகிறோம். உள்ளுணர்வில் உறுத்தலில் எழுதியிருப் பாரோ என எண்ணத்தோன்றுகிறது. கவிதை வரி களாகவே அவரின் வாழ்வும் நிகழ்ந்து விட்டது. எறிகணை அக் குடும்பத்தை பலிகொண்டு விட்டது. நீடித்து வாழ்ந்திருந்தால் நிச்சயம் தரமான கவிதை களைத் தந்துமகிழ்வித்திருப்பார் எனக் கூறி நிறைவு செய்கிறேன்.

# குருதி விலை

பேராசிரியர் கா. சிவத்தம்பி

நெல்லை க.பேரன் என்ற எழுத்தாளன் மிகுந்த உழைப்பாளி; நிறைய எழுதவேண்டும் என்று தீயின் நாக்குப் போலத் தாகப்பட்டு நின்றவன்; நிறைய எழுதியவன், அவனது எழுத்து வேட்கை இலக்கியம் எனும் வட்டத்துக்குள் மாத்திரம் நின்றுவிட்ட ஒன்றன்று அது எழுத்தின் நவீன பரிமாணங்கள் எல்லாவற்றையும் உள்ளடக்கி நின்றது. பத்திரிகை எழுத்தையும் படைப்பையும் தன்னிடத்தே ஒருங்கிணைக்கப் பார்த்தவன் பேரன். இந்த ஒருங்கிணைப்பு அவா, முயற்சி, பல விமரிசனங்களுக்குக் காலமைத்தது. ஆனால், பேரன் என்ற மனிதன், எழுத்தாளனாகி நின்றவனுக்கு ஒரு மனிதாயுதக் கவசத்தை வழங்கினான். பேரன் அற்புதமான மனிதன். மற்றவர்களின் மனதைத் துன்புறுத்தாதவன். அதைச் செய்யவே முடியாதவன். அவனது மனிதநேயம் அவனைப் பலருக்கு மறக்கமுடியாத நண்பனாக்கிற்று.

பேரனான எழுத்தாளனும் எழுத்தாளனுள் பேரனும் என ஓர் இணைப்பு முயற்சி அவன் ஆளுமைக்குள் நடந்து கொண்டேயிருந்தது அவனுக்குத் திடீரென இந்த மறைவு! பேரன் இன்று ஒரு சின்னமாகிவிட்டான். நம்மீது வீழ்ந்து கொண்டும், வீழ்த்தப்பட்டுக் கொண்டுமிருக்கும் இராணுவ பலத்தின் ஊமைத்தனமான சிதறல்கள் அந்த மனிதனை, அவன் குடும்பத்தை ஒரு கணநேரத்தில், முனகலுக்குக் கூட இடமளிக்காத துரித நிமிடமொன்றில் வரலாற்றுப் பொருளாக்கி விட்டன. எத்தனை அநியாயம்; எத்துணை கொடுமை குடும்பமே அழிந்தது; அழிக்கப் பட்டது. தனது குடும்பத்தையே தனது உயிர்ப்பாகக் கொண்டிருந்த ஒரு மனைவி; தகப்பனுடன் நேயப்பிணைப்பில் என்றும் துவண்டு கிடந்த பிள்ளைகள்; அந்தக் குடும்பம் ஒரு “ஷெல்“லின் குருட்டுத் தாக்கத்தினால் அழிந்தது.

இந்த அழிவுச் சாம்பலினூடே, பேரன் தங்கப் பறவையாக, தன் குடும்பத்தைத் தன் சிறகுக்குள் ஒடுக்கிய பறவையாக மேற்கிளம்புகிறான். அவன் நினைவு நமது நெஞ்சங்களில் நிச்சயப்படுத்தப்படுகின்றது பேரன் பெயர் வாழவேண்டும். அவனின் ஆசைகள் நிறைந்த நெஞ்சுக்காக; நமது விமோசனத்துக்கு அவன் வழங்கியுள்ள குருதி விலைக்காக!



# ஒரு விதமான கதை

- நெல்லை க. பேரன் -

மத்தியானம் சாப்பிட்டுவிட்டு வந்தேன். வாயில் பீடா வெற்றிலையைப் போட்டுக் குதப்பியவாறே "உண்டகளை தொண்டருக்கும் உண்டு" என்பதை ஞாபகப்படுத்திக் கொண்டு தளர்நடை போட்டுக் கொண்டு டியூக் வீதியில் நடக்கிறேன். தபாற்தந்திப் போக்குவரத்துத் தலைமை அலுவலகக் கட்டிடம், கூட்டுறவு வங்கிக் கட்டிடம், "டைம்ஸ் ஒவ் சிலோன்" பத்திரிகாலயக் கட்டிடம் ஆகியன டியூக் வீதியில்தான் இருக்கின்றன. காரியாலய ஊழியர்களின் போக்கு வரத்தைத் தவிரப் பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் இ.போ.ச. மற்றும் வாகனாதிகளின் போக்குவரத்து இவ் வீதியில் இல்லை: புதிய கடல் கடந்த தந்திய போக்கு வரத்துக் காரியாலயத்தின் உயர் மாடிக் கட்டிடங்களைக் கட்டுவதற்காக உதவி செய்யும் இயந்திரங்களின் கடா முடா சத்தமும் பெரிய றோலர்கள் அசையும் "கர்புர்" ஒலியும் அதிர்வும் டியூக் வீதியில் சர்வசாதாரணம்.

நான் வேலை செய்யும் இடம் டியூக் வீதியோர மாகச் சற்றுப் பள்ளத்தில் தபால் பொதிகள் அனுப்பும் அலுவலகங்களுக்கு அண்மையில் இருக்கிறது. பிரதான வீதியிலிருந்து படிகளில் இறங்கித்தான் எனது காரியாலயத்துள் நுழைய வேண்டும். படிக்கட்டுகளுக்கு அண்மையில் வீதியோரமாக மாமரங்களும் ஒரு மூலையாகச் சிவப்பு வர்ணம் பூசிய தபால் பெட்டியும் இருக்கிறது. தபால் பெட்டியின் அருகே மாமரத்தையே கூரையாகக் கொண்டு ஒரு குடும்பம் வாழ்கிறது. நான் போகும்போதும் வரும்போதும் இக் குடும்பத்தை அவதானிக்கத் தவறுவதில்லை. சுமார் முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒருத்தி அழுக்கடைந்த உடை களுடன் இரண்டு குழந்தைகளையும் வைத்துக் கொண்டு படுத்திருந்தாள். அவள் ஆண்கள் சாரம் உடுத்துவது போலத் தன் மார்பில் ஒரு கந்தல் சேலையைச் சுற்றி யிருந்தாள். தெருவிலிருந்து உடைந்து பிளந்துபோன தட்டையான கல்லொன்றைத் தலையணையாக வைத்துப் படுத்திருந்தாள். அவளருகே குழந்தைகள் இரண்டும், கந்தல் துணிகளின்மீது வளர்த்தி விடப் பட்டிருந்தன. அவளிடம் இன்னொரு அதிசயத்தை என்னால் காணமுடிந்தது. வாயில் சிகரெட்டை வைத்துப் புகைத்துக் கொண்டிருந்தாள். அவள் முகத்திலே பலவிதமான சுருக்கங்கள், வெடிப்புகள், கீறல்கள் எல்லாம் இருந்தன. அவளது வறுமையின் அறிகுறி என உணர்ந்தேன்.

அவள் அழகாகச் சிகரட்டை வாயில் வைத்துப் புகைப்பது எனக்கு ஒரு அனுபவமாக இருந்தது. இலங்கை யில் பெண்கள் சுருட்டுக் குடிப்பதை அதுவும் யாழ்ப் பாணத்துக் கிராமங்களில் நேரடியாகக் கண்டிருக் கிறேன்; எனது பாட்டி ஒருத்திகூட நன்றாகச் சுருட்டுக் குடிப்பாள். ஆனால் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள், உல்லாசப் பிரயாணிகளைத் தவிர மற்றத் தமிழ் அல்லது சிங்களப் பெண்கள் சிகரட் புகைப்பது அபூர்வம், பக்கத்தில் கட்டிடத்தில் கூலி வேலை செய்பவராவது கொடுத்திருப்பார்கள் என எண்ணினேன். அதை உண்மைப்படுத்துவதுபோல அப்போது பக்கத்து வேலைத்தளத்திலிருந்து கூலியொருவன் வந்து அவளருகே அமர்ந்து ஏதோ பேசிக்கொண்டிருந்தான். பிறகு அவளது வாயிலிருந்த சிகரட்டை வாங்கித் தன்னுடையதைப் பற்ற வைத்தான். பிறகு அவள் அவனுடன் ஏதோ கதைத்துச் சிரித்தபடியே அவனது சட்டைப் பொக்கற்றிலிருந்து இன்னொரு சிகரட்டை எடுத்து வெகு லாவகமாகப் பற்ற வைத்து அவனது முகத்திற்கு நேரே ஊதிக்காட்டினாள். இருவரும் களுக் களுக்கென்று சிரித்தனர். ஒருவேளை இவன்தான் அவளது கணவனாக இருக்குமோ என்று யோசித்தேன். அப்படியென்றால் இவர்களுக்கென்று ஒரு சிறிய சேரி வீடாவது கிடைக்காமலா போயிருக்கும். இவள் நீண்டகாலமாக இந்த மாமரத்தடியே தஞ்சமென்று படுத்திருக்கிறள். மழை நாட்களில் என்ன செய்வாளோ தெரியாது. அருகிலுள்ள அரசாங்கக் கட்டிடங்களின் கீழ்

எங்காவது ஒரு ஓரமாக ஒதுங்கிக் கொள்வாள் என நினைத்தேன். அவளது தோற்றம் வறுமையின் வாட்டத்தை உணர்த்தினாலும் உடற்கட்டு இன்னும் நன்றாகத்தான் இருந்தது. இவள் ஒழுக்கத்தை விலைபேசி வாழ்பவளாக இருக்குமோ என எண்ணினேன். யாராவது பணம் கொடுப்பவர்களுடன் சரசம் பேசுவாள். பிறகு எங்காவது ஒதுக்கிடத்திற்கு அவளைச் கூட்டிப் போவார்கள். இரவில் ஒதுக்கிடம் தேடாமல் அந்த மாமரத்தின் கீழேயே தன் வியாபாரத்தை முடித்துக் கொள்வாளோ என்றெல்லாம் என் சிந்தனை ஓடியது.

எட அவள் யாராக இருந்தாலென்ன! எனக்கேன் அவரைப் பற்றிய கவலை? நானுண்டு என் வேலையுண்டு என்று பேசாமலிருக்க முடியாதா? முடியவே முடியாது. நான் கதை எழுதுபவன். கதைக்குக் "கரு" இல்லாமல் தெருத்தெருவாக அலைகிறேன். எனது காரியாலயத் திற்கு அருகே இப்படியான ஒரு "கரு" அருமையாகக் கிடைத்திருக்கும்போது அதைத் தவற விடலாமா? விடக் கூடாது. ஒரே மூச்சில் எழுதி முடித்துவிட வேண்டும் என்று இன்று மேசையின் முன்னாய் உட்கார்ந்து விட்டேன். தினசரி நான் காணுகின்ற இக்காட்சி கதைக்குரிய "கரு" தானா என்று முதலில் யோசித்தேன். அருமையான "கரு" என்று என் எழுத்தாள மனம் இடித்து வைத்தது. (இப்போது சமுதாயப் பிரச்சினைகளை மையமாக வைத்துக் கதை எழுதுவதுதான் பாஷன்) ஏழைகளையும், உழைப்பாளிகளையும், பிச்சைக்காரர் களையும், அனாதைகளையும், தாசிகளையும் வைத்துக் கதை எழுதாவிட்டால் அவன் பூரணமான எழுத்தாளனே அல்ல என்று யாரோ எழுத்தாளர் சந்திப் பொன்றில் சொன்ன கருத்துக்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. (என் இரண்டரை ரூபா "சியால்" பேனா விரைவாக அசைகிறது.)

மாமரத்தடியில் படுத்திருக்கும் இவள் ஒரு அனாதை. பிள்ளைகள் இரண்டு. தகப்பன் பெயர் தெரியாமல் பிறந்தவர்களாக இருக்கலாம். இருக்கலா மென்ன? அப்படித்தான். அடிக்கடி கண்ட கூலிகளுட னும் சரசம் விளையாடுகிறாள். சரசத்திற்கு ஆசைப்பட்ட எல்லோரும் அவளுக்குக் கணவர்கள் தான். கந்தல் உடைவேறு. கதைக்குரிய அருமையான பின்னணி களுடன் வாழ்கிறாள். இவளைவிட வேறுயார் என் கதைக்குக் கதாநாயகியாக முடியும்: எல்லாவற்றிற்கும் மேலாக இன்றைய சமுதாயத்தில் இவளும் இவளைப் போன்றவர்களும் மகா மகா பிரச்சினைகள் அல்லவா!

சரி. இவளை வைத்துக் கதையை ஆரம்பித்தால் இவள் ஏன் இப்படி ஆனாள் என்று ஆராய்ந்து பிறகு அதற்கு ஒரு முடிவும் எழுதவேண்டுமே! என் மூளை குழம்பியது. கதையை முடிக்க முடியாது போலிருக் கிறதே. "முடிவை வாசகர்களிடமே விட்டுவிடுகிறேன்" என்றால் என்ன? சீ! அது ஒரு எழுத்தாளனுக்கு மதிப் பில்லை. நோயையும் சொல்லி மருந்தையும் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவனால் சமுதாயத்திற்கு என்ன பயன்? சரி. இவளையும் பிள்ளைகளையும் முனி சிப்பல் லொறியில் ஏற்றிக் கொண்டுபோய் அனாதைகள் இல்லத்தில் சேர்ப்போமா? அதனால் இவளுடைய பிரச்சினை தீர்ந்து விடுமா? நாளைக்கு மாமரத்தடியில் இன்னொருத்தி வந்து "காம்ப்" போட்டு விடுவாள். இவளைப் போன்றவர்களை ஒழிக்க வேண்டுமானால் இப்படியான நிலைமை இவர்களுக்கு உருவாகாத சமுதாயம் தேவை என்றுதான் எழுத வேண்டும். வறுமை நானே இவளை இந்த நிலைக்கு ஆக்கியது? புருஷன் இருந்து இறந்திருந்தாலும்கூடப் பணம் இருந்திருந்தால் இப்படி நடுத்தெருவுக்கு வந்திருக்க மாட்டாள். உண்பதற்கு எதுவும் இல்லாததால் யாசிக்க வேண்டி மாமரத்தடிக்கு வந்திருப்பாள்: நடுத்தெருவுக்கு வர முன்னர் எங்காவது தனியாகவோ அல்லது கூட்டாகவோ "விலைமாதாக" இருந்திருப்பாள். அப்போது நல்ல உழைப்பு இருந்திருக்கும். பிறகு பிறகு தேவையும் மதிப்பும் குறைந்து பாதையோரத்திற்கு வந்திருக்கிறாள். அல்லது பெரிய ஹோட்டல்களுக்கும், பெரிய இடங்களுக்கெல்லாம் போகக்கூடிய வசதியும் திறமையும் அறிவும் நுட்பமும் அவளிடம் இல்லாமல் இருக்கலாம்.

ஓ... இப்போது அவளைச் சல்லடை போட்டதில் என்ன பலன்? அவள் எப்படியோ இப்படி ஆகிவிட்டாள். இனி அவளைத்திருத்த வேண்டும். அவள் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவேண்டும். அவளைப்போல மற்றப் பெண்களும் மாறாமல் இருப்பதற்கு வழி செய்ய வேண்டும். இவ்வளவையும் எனது கதைக்குள் கொண்டு வந்து புகுத்தி எப்படியாவது வாசகர்களிடம் "சபாஷ்" வாங்கி ஒரு "சித்தாந்த எழுத்தாளனாகி" விடவேண்டும் என்ற எண்ணம் என்னிடையே வலுக்கிறது. சித்தாந்தம் என்றதும் எந்தச் சித்தாந்தத்தில் இவளது வாழ்க்கை அடங்குகிறது என்று யோசித்தேன். மாக்சிச சித்தாந்தம் தான். மாக்ஸ்தானே ஏழைகளைப் பற்றியும் தொழிலாளர் களைப் பற்றியும் சொல்லியிருக்கிறார்! வர்க்கங்களின் வேறுபாட்டை அவர்தானே உணர்த்தியிருக்கிறார். ஆகவே அவருடைய சித்தாந்தத்தைப் பின்பற்றி இவளுடைய கதையை எழுதவேண்டும். நிலமானிய சமுதாய அமைப்பில் அகப்பட்டு உழன்று கஷ்டப்பட்ட ஒரு குடும்பத்தினளாக இவளைப் படைத்தால் தான் நடுத்தெருவுக்கு இவளைக் கொண்டுவந்து நிறுத்த முடியும். இப்போதிருக்கிறதும் நிலமானிய சமூக அமைப்புத்தானே! அது இன்னும் மாறிவிடவில்லையே.

அதற்காகத்தான் இவளைப்பற்றி எழுதி ஒரு முடிவு காணவேண்டும்:

வர்க்கங்கள் ஆளுமை கொண்ட சமுதாயத்தில் வறுமையை ஒழிக்க முடியாது. பணக்காரன் இருக்கும் வரைக்கும் ஏழைகள் இருந்துதானே ஆகவேண்டும். எவ்லோருமே பணக்காரராக மாறிவிட்டால்... அது எப்படி முடியும்? உள்ளவனிடமிருந்து இல்லாதவனுக்குப் பறித்துக் கொடுப்பதா?

அப்படித் தேவையில்லை: பணம் கொழிக்கும் ஸ்தாபனங்களையும், முதலாளிகளின் சொத்துடமை களையும் அரசாங்கம் தேசியமயமாக்கித் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். இது நடக்கத் கூடிய காரியமா? அரசாங்கத்தில் மந்திரிகளாக

இருப்பவர்களிடமே பெரிய தோட்டங்களும், ஆலைகளும், வியாபார ஸ்தாபனங்களும் இருக்கின்றனவே. அவர்களே இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள்.

இடையில் என் கதையின் கருவுக்கு ஓடி வருகிறேன். தேசியவுடைமைக்கும், வர்க்க முரண்பாட்டிற்கும் என் மாமரத்தடிக் கதாநாயகிக்கும் என்ன சம்பந்தம்? அவளின் வாழ்க்கையை எப்படிச் சீராக்கலாம்? மறுபடியும் என் சிந்தனை தீவிரமடைகிறது.

வசதிகுறைந்த குடும்பத்தில் உள்ள பெண்கள் தங்கள் கற்பை விற்பதற்குப் பணம்தான் முக்கிய காரணம். வசதியடைந்தவர்கள்தான் பொழுது போக்காகவும், காம இன்பத்திற்கும் ஒழுக்கத்தை மீறுவார்கள். சில உயர்தரக் குடும்பங்களில் ஒழுக்கத்தை மீறி நடப்பது தான் நாகரிகமாக்கப்பட்டுள்ளது. ஆனால் கிராமங்களில் வாழ்ந்து, கஷ்டங்களில் உழன்று மற்றவர்களால் ஏமாற்றப்பட்டவர்களும் திட்டமிட்டுக் கெடுக்கப்பட்டவர்களுமே அனேகமான நடைபாதைப் பிச்சைக்காரர்களாகவும் விபசாரிகளாகவும் மாறிவருவதை என்னால் காணமுடிகிறது. ஆனால் மாமரத்தடியில் படுத்துறங்கும் அந்தப் பெண்ணைப் பொறுத்தவரையில் அவளிடம் நல்ல உடற் கட்டு இருந்தது. உழைக்கக்கூடிய ஆற்றலும் இருந்தது. அவள் விரும்பினால் ஒருவேளை அருகிலுள்ள வேலைத்தளத்தில் மண் சுமக்கும் கூலி வேலையாவது செய்து பிழைக்கலாம். ஆனால் அவளுக்கு அது விருப்பமாகவோ அல்லது அவசியமாகவோ படவில்லைப் போலும். அங்கு வேலை செய்யும் கூலிகளே அவளுக்கு உதவியாக இருக்கும்போது கூலிவேலை செய்வதைப் பற்றி அவளுக்கென்ன கவலை? எப்படியோ எந்தவிதமான சுகாதார சீருமில்லாமல் பிள்ளைகளையும் வளர்த்துத் தானும் வாழ்ந்து வருகிறாள்.

என்னைப் பொறுத்தவரையில் இவளை ஒரு இலங்கை ஹிப்பி என்பேன். ஆனால் வெளிநாட்டுக் ஹிப்பிகளுக்கும் இவளுக்கும் ஒரு வித்தியாசம். அவர்கள் ஊர் ஊராக உலாவி எதையாவது யாசித்து உண்கிறார்கள். இவள் மாமரத்தடியிலேயே படுத்துவிடுகிறாள். அவர்களும் இவளைப் போலத்தான் குளிப்பதிலோ முழுகுவதிலோ கவனஞ் செலுத்துவதில்லை, வீதியோரங்களிலும் நிழல்களிலும் படுத்து உறங்குவார்கள். பண்பாட்டை மறந்து காம சேஷ்டைகளில் ஈடுபடுவார்கள். அத்தகைய ஹிப்பிகளை அமெரிக்காதான் உற்பத்தி செய்கிறது என்கிறார்கள். அப்படியானால் கொழும்பு நகரத்துக் ஹிப்பிகளையும் இலங்கைதான் உற்பத்தி செய்கிறது என்று சொல்லலாமா? அப்படிச் சொன்னால் அமெரிக்காவும் இலங்கையும் சில போக்குகளில் ஒன்றுபடுகின்றனவா?

ஓ... சிறுகதைக்குள் அரசியல் கலக்க விடுகிறேன் போலும். சரி... ஓட்டத்தைத் திருப்புவோம். வர்க்கங்களைப் பற்றிப் பேசினால்.... அது மட்டும் அரசியல் இல்லையா? "அரிசி முதற்கொண்டு அடுப்படி வரைக்கும் அரசியல் தான்" என்று யாரோ நண்பன் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. அப்படியானால் சிறு கதையிலும் அரசியல் கலக்கலாம். ஓம். அது கலையம்சத்தோடு கலக்க வேண்டும்.

கலையம்சம் என்றால்......

பசித்திருக்கும் தொழிலாளியையும் வர்ணனையோடு எழுதவேண்டும். "அதாவது நாரைபோலச் சவண்டு கொக்குக் கழுத்துப்போல மெலிந்து வாடிய றோஜாபோலச் சோர்ந்து இருந்தான்...." என்று எழுதினால் அது கலையம்சமா?

தலையைக் குடைகிறேன். கடவுளே! இந்தக் கதையை முடிக்க உதவி செய்யமாட்டீரா! கடவுள் என்ன எழுத்தாளரா? ஓ... அவர்தானே என்னையும் படைத்திருக்கிறார். என் படைப்பையும் படைக்கின்றார்:

ஓ... எல்லாத்துக்கும் முதல் கடவுள் இருக்கிறாரோ! எனக்குள்ளே கேட்டுக் கொள்கிறேன். அவர் இருந்தால் ஏன் வறிய மக்களைப் படைக்க வேண்டும்? எல்லோரையும் பணக்காரர்கள் ஆக்கிவிடலாமே... கடவுள் முட்டாளாக இருப்பாரோ?... இல்லை. அவர் புத்திசாலிதான். ஒரு முட்டாள் நிச்சயம் கடவுளாக இருக்க முடியாது.

அப்படியானால் வறுமையை ஏன் படைக்க வேண்டும்?

என்னைப் போன்றவர்கள் கதை எழுதுவதற்காகப் படைத்திருக்கலாம்.

"என்ன பகிடியாக் கிடக்கோ..." என் மனம் இடித்துரைத்தது. மீண்டும் ஒரு தடவை நான் கதை எழுதப் புகுந்தவளைப் பற்றிச் சிந்தித்துவிட்டு இப் போதைக்கு இவளைப் போன்ற சோம்பேறிகளையும் சோரம் போனவர்களையும் அரசாங்கம் தனது பாதுகாப்பின்கீழ் பொருத்தமான வேலைகளைக் கொடுத்து வாழவைக்க வேண்டும். இவர்களுடைய தகப்பன் பெயர் தெரியாத குழந்தைகளையும் தகுந்த பாடசாலைகளில் படிக்க வைத்து ஆதரிக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டு இனிமேல் இவளைப் போன்றவர்கள் தோன்றாமலிருக்க என்ன வழி என்றும் சொல்லிலிட்டால் கதை ஒரளவு முடிந்த மாதிரித் தான் என்று நிலைத்துக் கொண்டேன்.

வெகு விரைவில் கதை முடியப்போகிறதே என்று நிம்மதி.

எல்லாரையும் உள்ளவர்களாக்கும் சமத்துவ சமுதாயம் எப்படித் தோன்றப் போகிறது? இப்போதுள்ள மேல்தட்டு (பிரபுத்துவ) வர்க்கம், நடுத்தர, மத்தியதர வர்க்கம், பாட்டாளி, தொழிலாளி, விவசாயிகள் வர்க்கம் ஆகிய மூன்று பிரிவினரும் இதில் சம்பந்தப்பட வேண்டும். நடுத்தர மத்தியதர வர்க்கத்தினர்தான் கீழே வரவும் முடியாமல் (போலிக் கௌரவங்களும் பிறவும்) மேலே போகவும் முடியாமல் நசிந்து கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள். இவர்கள் கீழ்த்தட்டுப் பாட்டாளி, தொழிலாளி, விவசாயி வர்க்கத்துடன் இணைந்து மேல்தட்டு வர்க்கத்திற்கு எதிராகப் போராட வேண்டும். அப்போதுதான் உண்மையான போராட்டம் உருவாகி மக்கள் கையில் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். இந்த நாட்டின் பெரும்பான்மை தொழிலாள விவசாயிகளை மிகச் சிறுபான்மையினரான பணக்காரர்களும்,

முதலாளிகளும் ஆளுகிறார்கள். பதவிகளுக்கு மதிப்பும் கௌரவமும் உள்ளவரை எந்த அரசாங்கம் வந்தாலும் மாறிமாறி இதே கதைதான். மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையும் மக்களுக்கு விடிவோ விமோசனமோ கிடையாது.

மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் அடிமைநிலையும் பிச்சைக்காரர்களும் விபச்சாரிகளும் குறைந்து இல்லாமல் போய்விடுவார்களா! மாமரத்தடி வாழ்க்கை ஒழிக்கப்படுமா? மக்கள் ஆட்சியில் அதிகாரத்திலிருப்பவர்கள் பிறகு ஒரு புதிய வர்க்கமாக மாறமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?

இப்படியே கேள்விகளை அடுக்கிக் கொண்டு போனால் கதையை முடிக்க முடியாது போலிருக்கிறதே! கதையில் கடைசிப் பகுதி ஒரே பிரச்சாரமாக இருக்கிறதோ... கதை பிரச்சாரம் செய்யலாம். ஆனால் அதிலும் கலையம்சம் இருக்க வேண்டும்.

ஓ...இந்தக் "கலையம்சம்"

அது எல்லாவற்றையும் கெடுக்கிறது. ஒரு கருத்தை உடனடியாகச் சொல்லிவிடாது உணரவும் விடாது கொஞ்சம் கடத்தித்தான் விடுமோ.. தொழிலாள, விவசாயிகளின் அரசாங்கத்தில் அவர்களின் உண்மையான, விசுவாசமான உழைக்கும் பிரதிநிதிகள் தான் அதிகாரிகளாக இருப்பார்கள். அவர்கள் நிச்சயமாக பூர்ஷ்வா வர்க்க மேல்தட்டு வாழ்க்கைக்கு ஆசைப் பட்டவர்கள் அல்லர். அதனால் மக்களின் தேவை களையும் பிரச்சிளைகளையும் புரிந்து கொண்டு நேர்மை யாகவும், ஆணித்தரமாகவும் அவர்கள் செயற்பட்டு உண்மையான சமத்துவத்தையும் சகோதரத்துவத்தை யும் முழு நாட்டிற்கும் பொருளாதார வலுவையும் ஏற்படுத்துவர்.

பிறகு........

பிறகு?

ஏழைகளும் பணத்திற்காகத் திருடுபவர்களும் பொருளுக்காக விபசாரம் செய்பவர்களும் இருக்க மாட்டார்கள். எல்லோரும் இன்பமாக வாழ்வார்கள்...

ஒரு கேள்வி........

என்னது? மூளை குடைகிறது

புரட்சிகர சமுதாயத்தில் யாராவது பொழுது போக்கவும், இன்பத்திற்காகவும் திருடியும் காம வேட்டையும் செய்தால்.......

அந்த அமைப்பில் அப்படிச் செய்யக்கூடிய சந்தர்ப்பம் இருக்காது. எல்லோரும் கட்டாயமாக வேலை செய்யவேண்டியிருக்கும். வெறுமனே சதை வளர்ப்பவர்களும், வட்டிப் பணத்தில் உழைப்பவர்களும் இருக்க மாட்டார்கள். உண்மையான தேசிய உணர்வும், ஒற்றுமையும் மனிதாபிமானமும் பண்பாடும் இருக்குமே தவிர வேறு பிரச்சினைகளுக்கு இடமிருக்காது.

நிச்சயமாக?

நிச்சயமாக.

சரி. அப்படியானால் அந்த சமுதாய அமைப்பு வரட்டும்.

ஓ...அதன் பிறகு...

பிறகு.

கதை எழுதக் கருவே கிடைக்காதோ.......

ஓம்... அதுவும் நல்லதுதான்.

சரி. இத்துடன் என் கதை முடிகிறது. இனிமேல் உங்கள் விமர்சனத்தைச் சொல்லலாம்.

***(1971)***

# ஓ! தமிழ்ப்பெண்ணே!

ஓ! தமிழ்ப் பெண்ணே!
கொஞ்சம் நில், கவனி!
இத்தனை நாட்களும் நீ இருட்டிலே இருந்தது போதும்
இனிமேலாவது வெளிச்சத்துக்கு வா பெண்ணே!
கல்லானாலும் கணவன்,
புல்லானாலும் புருஷன் என்று
கணவன் "கசிப்பைப் போட்டுவிட்டுக்
கன்னா பின்னாவென்று திட்டி
உன் மயிரைப்
பிடித்திழுத்து மார்பகத்தை நகத்தால் கீறிச்
சித்திரவதை செய்தாலும் "என்ரை தெய்வம்" என்று
பேசாமல் பார்த்திருப்பாய்?
பாவம் நீ பெண்ணே
நாயகனைத் திருத்த வந்த
நல்லதொரு நாயகியாய்
வாய் வன்மை கொண்ட நல்ல சீரிய பெண்மணியாய்
பொங்கியெழு பெண்ணே! நீ பொறுத்தது போதும்
மாற்றானின் மனையாளை மயக்கத்துடன் பார்த்திடுவார்
கல்லூரிக் கன்னியரைக்
கனவிலும் கண்டிடுவார்
கள்ள மனங்கொண்ட பல வெள்ளை வேட்டிக் காரர்களைக்
கட்டி இழுத்து வந்து கம்பத்தில் கட்டிடுவாய்
கற்பென்று காப்பென்றும் கண்டபடி பேசிடுவார்
கற்பென்றால் என்ன? பெண்களுக்கு மட்டுந்தானா?
"அண்ணா" போல் பழகிக் கொண்டு
கள்ளமாக ஆசை வைப்பார்
பெண்ணாகப் பிறந்து நீயும் பட்டவைகள்
போதும் இனி!
பொங்கி எழுந்திடுவாய்!
போர்க்கோலம் பூண்டிடுவாய்
மூடக் கொள்கைகளைத்
தீவிரமாய் எதிர்த்திடுவாய்!
பெண்ணே! உனக்கு இங்கு
கடமைகள் பலவுண்டு
கண்ணியமாய்ச் செயற்படுவாய் - வீண்
பேச்சினைக் குறைத்து வீர வனிதையாய்ப் புறப்புடவாய்

(1984)

- நெல்லை க. பேரன்

உங்கள் இல்லங்களில் நடைபெற
இருக்கும் மங்களகரமான
நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்



## திருமண அழைப்பிதழ் காட்சியறை

MATHI COLOURS



## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

**T.P: 021 2229285, 077 7222259**


இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.